விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 091 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 06 செவ்வாய்க்கிழமை (19.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


**வெடுக்குநாறி விவகாரம்**

# தமிழ்க் கட்சிகளுடன் ஜனாதிபதி நாளை சந்திப்பு

*(கொழும்பு)*

தமிழ்க் கட்சித் தலைவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை சந்தித்துக் கலந்து ரையாடவுள்ளார்.

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர் கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட வுள்ளது. *(15ஆம் பக்கம் பார்க்க)*



**வவுனியாவில் அகால மரணங்கள்**

## கிணற்றில் தவறி விழுந்த இளம் யுவதி மரணம்

(வவுனியா)

வவுனியா சமனங்குளம் பகுதியில் தோட்டக் கிணற்றில் தவறி விழுந்து இளம் யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த தவரூபன் லக்சிகா (வயது - 24) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

வவுனியா, சம னங்குளம் பகுதியில் ▷15

## பேருந்து மோதியதில் ஒருவர் ஸ்தலத்தில் பலி

(வவுனியா)

வவுனியா பூவரசங்குளத்தில் பேருந்து மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பூவரசங்குளம் சந்தியிலுள்ள பேருந்து தரிப்பிடத்தில் நேற்றுக் காலை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் பூவரசங்குளம் மணியர்குளம் பகுதியைச் சேர்ந்த ▷15

## யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வீதியால் சென்ற வரை யானை தாக்கியதில் குறித்த நபர் மரணமடைந்துள்ளார்.

இதில் செட்டி குளம் மருதமடுப் ▷15

**வெடுக்குநாறி விவகாரம்**

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் ஆராய்வு

(கொழும்பு)

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலய விவகாரத்தில் கைது செய்யப்பட்டோர் குறித்து ஆராய்வதற்கு ஏற்கெனவே 2 அதிகாரிகள் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும், இவ் விவகாரம் ▷15

**பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகளில்**

# கைதானவர்கள் மீது சித்திரவதை

### ஐ.நாவில் அறிக்கை கையளிப்பு

*(ஜெனிவா)* நாட்டில் பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படும் சட்டவிரோதக் கொலைகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பான அறிக்கை ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

*(16ஆம் பக்கம் பார்க்க)*

## ஜனாதிபதித் தேர்தல் முதலில் நடத்தப்படும்

### அமைச்சரவையில் ரணில்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அமைச்சரவைக்கு அறிவித் ▷15

**இலங்கைக்கு**

## 100 மில்லியன் கடன் உதவி

(கொழும்பு)

இலங்கைக்கு 100 மில்லியன் டொலர் ▷15


## சபாநாயகர் மகிந்தவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை

### இன்றும் நாளையும் விவாதம்

(கொழும்பு)

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று செவ்வாய்க்கிழமை நாளை புதன்கிழமை ஆகிய தினங்களில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள் ளது.

இதற்கமைய, இன்று மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரையும், நாளை புதன் கிழமை மு.ப 9.30 மணி ▷15



## பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்துக

**வெடுக்குநாறி சம்பவத்தை கண்டித்து யாழ்.பல்கலை முன்றலில் இன்று கவனயீர்ப்பு**

(யாழ்ப்பாணம்)

பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தியும் வெடுக்குநாறி சம்பவத்தை கண்டித்தும் யாழ். பல்கலைக்கழக முன்றலில் இன்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட வுள்ளது.

வெடுக்குநாறிமலைச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப் ▷16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

சீமாட்டி லீலாவதி இராமநாதன்
நினைவுப்பேருரை-2024

பேருரைத் தலைப்பு :
**" Modern Muslim citizenship in 1940s Ceylon: Identity, politics, and community aspirations at the Moors Islamic Cultural Home"**
(1940களின் இலங்கையில் நவீன முஸ்லீம் பிரஜாவுரிமை: மூர் இஸ்லாமிய பண்பாட்டு அகத்தில் அடையாளத்துவம், அரசியல் மற்றும் சமுதாய அபிலாசைகள்)

பேருரை வழங்குனர் :
**Professor Farzana F. Haniffa,**
**Department of Sociology,**
**University of Colombo.**
(பேராசிரியர்.பர்ஸனா F.ஹனிபா,
சமூகவியற்றுறை,
கொழும்புப் பல்கலைக்கழகம்.)

திகதி : 20.03.2024 (புதன்கிழமை)
பி.ப 3.45 மணி

நிகழ்விடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C-8557)

# வடக்கில் விசேட தேவையுடையோரின் வாகனங்களுக்கு புதிய இலக்கம்

## சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கவும் ஏற்பாடு

இலங்கை மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் முயற்சியினால் விசேட தேவையுடையோருக்காக உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வாகனங்களுக்கு மோட்டார் வாகனப் பதிவுப் புத்தகம் வழங்கும் ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி வடக்கில் நடைபெற்ற விசேட நடமாடும் சேவையில் விசேட தேவையுடையோர் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக மேற்குறித்த செயற்திட்டம் நடைபெறுகின்றது.

விசேட தேவையுடையோருக்காக உள்ளூரில் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை செலுத்துவதில் அவர்கள் பல இடர்பாடுகளைச் சந்தித்து வரும் நிலையில் அவர்களின் மோட்டார் வாகனங்களுக்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் புதிய இலக்கங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரங்களையும் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்தவகையில் 325 - 6000 முதல் 7000 வரை விசேட தேவையுடையவர்களுக்கு உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வாகனங்களுக்கான இலக்கங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த செயற்திட்டம் இலங்கையில் முதன் முறையாக நடைபெறுவதாகவும் இதில் வடக்கு மாகாணம் முன்நிலை வகிப்பதாகவும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம)

# வெடுக்கு நாறி விவகாரம் தமிழ் எம்.பிக்கள் சபையில் இன்று போராட தீர்மானம்

(கொழும்பு)

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோயிலில் தமிழ் மக்களின் வழிபாட்டுரிமையை தடுத்தது, 8 தமிழ் இளைஞர்களை கைது செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று பாராளுமன்றத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைதானவர்களின் வழக்கு விசாரணை இன்று வவுனியா நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த பின்னணியில் இன்று காலை பாராளுமன்றத்துக்குள் போராட்டத்தில் ஈடுபட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் கலந்து கௌ்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. (ம-7.10)


SILVER SHIELD
மலிவு விற்பனை
கடந்த 40 வருடங்களாக யாழ். மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன் / கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்
(C-8560)
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இல. 303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470


# மரண அறிவித்தல்



பிறப்பு 12 - 09 - 1969

இறப்பு 18 - 03 - 2024

## சுமங்கலா முருகதாஸ்

(அபிவிருத்தி உத்தியோகத்தர் - வட மாகாண கல்வித் திணைக்களம்)

நாச்சிமார் கோவிலடி கட்டுவன் மேற்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இராசவீதி, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட சுமங்கலா முருகதாஸ் அவர்கள் நேற்று (18.03.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் திருநாவுக்கரசு - மல்லிகாதேவி தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்ற இரத்தினம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இரத்தினம் முருகதாஸ் (கணக்காளர்-சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும் கீர்த்திகன் (SLIIT), வேணுயன் (St. John - பரியோவான் கல்லூரி A/L 2025 ) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமயூரன் அவர்களின் அன்புச் சகோதரியும் தங்கராஜா, கடம்பமலர் (கனடா), தேவராஜா விஜயகுமாரி (ஜேர்மனி), குணரட்ணம் இன்பவதி (ஆசிரியை - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), வரதலட்சுமணன் அருள்ஞானசோதி, திருமயூரன் மஞ்சுலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (20.03.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இராசவீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (C-8563)

தகவல் : குடும்பத்தினர்
WhatsApp +9475 040 5100



# துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆங்கில பாட ஆசிரியை
திருமதி **கீதா ஜெயசீலன்**
அவர்களின் அன்புத் தந்தையார்

## செல்லமுத்து தர்மலிங்கம்


அவர்கள் மறைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம். அவரது மறைவினால் துயருற்றுள்ள குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-8559)

கல்லூரிச் சமூகம்
யா/ மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பளை


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. நடராசா சுதாகர்

அதிபர் ( SLPS III )
யா / உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாசாலை - வல்வெட்டித்துறை
[ NDT ( Maths ), BA, B.Ed., Dip in Edu., M.Ed. (2nd Upper) ]

அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 16.03.2024 ( சனிக்கிழமை ) அன்று நடைபெற்ற 38 வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணி ( M.Ed Second Upper ) பட்டத்தினைப் பெற்றுக்கொண்டதையிட்டு பாராட்டுவதுடன் அவர் மென்மேலும் பல பட்டங்களையும் பதவியுயர்வுகளையும் பெற்று பல்லாண்டு காலம் சிறப்புற வாழ வாழ்த்துகின்றோம்.

(C-8562)

வாழ்த்துவோர் :- குடும்பத்தினர் மற்றும் நலன் விரும்பிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக வெப்பம் நிலவுவதால் தோல் நோய் ஏற்படும் அபாயம்

## விசேட தோல் சிகிச்சை வைத்திய நிபுணர்

(கொழும்பு)

**அதிக வெப்பமான காலநிலை நிலவுவதால் தோல் நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக விசேட தோல் சிகிச்சை வைத்திய நிபுணர் இந்திரா கஹவிட்ட எச்சரித்துள்ளார்.**

சூரிய ஒளி நேரடியாக சருமத்தில் படுவதால் சரு மத்தில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். அத்துடன் தோல் எரியும் தன்மையும் காணப்படலாம்.

சிறு பிள்ளைகள் உட்பட பாடசாலை மாணவர்கள் அதிகம் பாதிக்கப்படும் அபா யம் காணப்படுவதாகவும் இது தொடர்பில் மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது மிகவும் அவசி யமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி தோலில் வெள் ளைப் புள்ளிகள், தோல் அரிப்பு, வியர்வை கொப்பு ளங்கள், வியர்வை தேங்கி மார்பகங்களில் உருண்டை வடிவ பூஞ்சை போன்றவை இந்த தொற்று நிலைகளாக அடையாளம் காணப்படு கின்றன. குறிப்பாக பூஞ்சை தொற்று ஏற்பட்டால் உடன டியாக மருத்துவரை நாட வும்.

குழந்தைகள் சூரியனு க்கு பழக வேண்டும் என்ற கருத்தை தவிர்த்து இந்த கடினமான சூழலில் இரு ந்து குழந்தைகளை பாது காக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# மோட்டார் வாகனங்கள் மீதான வரி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அர சாங்கம் அனுமதித்ததன் கார ணமாக மோட்டார் வாகனங்கள் மீதான வரி வருமானம் அதி கரித்துள்ளது. கடந்த வருடம் முதல் ஒன்பது மாதங்களில் 57.1 சதவீதம் அதிகரித்து 21.5 பில்லியன் ரூபாவாக அதிகரி த்துள்ளதாக பொது நிதி முகாமைத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

மோட்டார்வாகனங்கள்மீதான வரி வருவாயாக 2022 முதல் ஒன்பது மாதங்களில் 13.7 பில் லியன் ரூபாய்கள் ஈட்டப்பட் டுள்ளன. அதன்படி, 2022 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் மோட்டார் வாக னங்கள் மீதான வரி வருமா னம் 21.5 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இதேவேளை மின்சார வாகனங்களை இறக் குமதி செய்ய அரசாங்கம் அனு மதி வழங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (நி-5)

# நீர்வழங்கல் தொடர்பான முறைப்பாடுகள் அதிகரிப்பு



(கொழும்பு)

நீர் வழங்கல் தொடர் புடைய முறைப்பாடுகள் 30 வீதத்தால் அதிகரித்துள்ளது என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடி கால மைப்புச் சபையின் பிரதிப் பொது முகாமையாளர் அனோஜா களு வாராச்சி தெரிவித் துள்ளார்.

அதிகபட்ச கொள்ளள விற்கு தண்ணீர் விடப்பட்டா லும் தண் ணீர் தேவை அதிகரித்துள்ள தால் சில நுகர் வோருக்கு போது மான தண்ணீர் கிடைப் பதில்லை என்றும் அவர் சுட்டி யுள்ளார்.

தினசரி தண் ணீர்தேவை பத்து முதல் பதினைந்து சத வீதம் வரை அதிகரித்துள்ளது.

மேலும்நாட்டிலுள்ள அனை த்து நீர் வழங்கல் அமைப்பு களும் இந்த நாட் களில் எவ் வித பிரச்சினையும் இன்றி இயங்கி வருவதாகவும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையிடம் இன்னும் ஒரு மாதத் திற்கு போதுமான நீர் கொள் ளளவு இருப்பதா கவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (நி-5)

# 'மத வழிபாட்டை உறுதி செய்' திருமலையில் போராட்டம்

(திருமலை)

மத வழிபாட்டை உறுதி செய், வெடுக்குநாறிமலை யில் கைது செய்யப்பட்டவர் களை விடுதலை செய் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன் தினம் மாலை திருகோண மலையில் போராட்ட மொன்று இடம்பெற்றது.



குறிப்பாக வடக்கு- கிழக் கில் இடம்பெறுகின்ற பௌத்த மயமாக்கலின் ஒரு விட யமாகவே வவுனியா வெடு க்கு நாறிமலையில் கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாட்டுக்குச் சென்ற எட்டு பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இது உண் மையிலேயே கவலைக் குரிய ஒரு விடயமாகும்.

ஏனெனில் மத உரிமை என்பது எங்களுடைய இல ங்கை யாப்பின் முக்கிய மான அடிப்படை உரிமை களில் ஒன்றாக இருக்கிறது.

ஆனால் அதற்கு ஒரு தடை போடும் விடயமா கவே நாங்கள் இதனை கருதுகின்றோம்.

அரசாங்கம் இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாட்டை நிறுத்துவ தற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என போரா ட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர். (நி-5)

# தானியங்களை கொள்வனவு செய்யும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்

## பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலங்க ளில் தானிய வகைகளைக் கொள்வனவு செய்பவர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்படவேண்டுமென பொது சுகாதாரப்பரிசோ தகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து பொது சுகா தாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கருத்துத் தெரிவி க்கையில், பூச்சிகளால் தானியங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் வகையில் சில வியாபா ரிகள் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற இரசாய னங்களை சேர்க்கின்றனர்.

இதன்காரணமாக சந் தையில் காணப்படும் சந் தேகத்திற்கிடமான தானி யங்களை பரிசோதிக்கும் பணியில் உணவுப்பொருள் பரிசோதகர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் நச்சுப் பொருள் அடங்கிய இரசாயனங்கள் கலந்து விற்கப்படும் தானி யங்கள் மற்றும் பிற பொருட் களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் உற் பத்தியாளர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




எனவே தானியங்களை கொள்வனவு செய்பவர்க ளும் அவதானத்துடன் செயற் பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஐ.பி.எல் தொடரில் பங்கேற்க இந்தியா திரும்பினார் கோலி

### உற்சாகத்தில் ரசிகர்கள்



கோலி-அனுஷ்கா தம்பதிக்கு லண்டனில் 2 ஆவது குழந்தை பிறந்ததால் இங்கிலாந்துக்கு எதிரான 5 டெஸ்ட் கொண்ட தொடரில் அவர் ஆடவில்லை.

இதனால் நடப்பு ஐ.பி.எல். தொடரில் அவர் ஆடுவாரா என சந்தேகம் எழுந்தது. இந்நிலையில், விராட் கோலி லண்டனில் இருந்து மும்பை திரும்பியுள்ளார்.

விராட் கோலி நாடு திரும்பியுள்ள நிலையில அவர் ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவார்.

இன்று அவர் பெங்களூர் வந்து ரோயல் சேலஞ்சர்ஸ் அணியுடன் இணைந்து கொள்வார்.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் வரும் 22 ஆம் திகதி நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ்-ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் மோதுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## பந்து வீச்சாளர் தரவரிசையில் அஸ்வின் முதலிடம்

டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் முதலிடத்தை பிடித்துள்ளார்.

ஐசிசி வெளியிட்ட டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களுக்கான தரவரிசையிலேயே அஸ்வின் முதலிடத்தை பிடித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக பஞ்சாப் - தர்மசாலாவில் நடைபெற்றுள்ள போட்டியில் சிறப்பாக செயற்பட்ட அஸ்வின் 9 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்தே அவர் 870 புள்ளிகளுடன் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

இரண்டாம் இடத்தை ஜஸ்பிரிட் பும்ரா மற்றும் ஜோஷ் ஹசல்வூட் ஆகியோர் 847 புள்ளிகளுடன் பகிர்ந்துகொண்டுள்ளனர். மேலும், இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் பிரபாத் ஜயசூரிய 783 புள்ளிகளுடன் 8 ஆவது இடத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)





## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3066


### சாளினி





### சபரிசா




### துசா




### ஆகாஷ்




### தனு




### மது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் புத்தரிசி விழா



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி கமநல சேவை நிலையத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான புத்தரிசி விழா நடைபெற்றுள்ளது.

ஆண்டு தோறும் விவசாயிகள் தாம் பெற்றுக்கொண்ட அறுவடையின் முதற் பகுதியை காணிக்கையாக வழங்கும் பாரம்பரியமாக இந்த புத்தரிசி விழா வருடாந்தம் நடைபெற்று வருகின்றது.

விவசாயத்துறை அமைச்சும் கமநல சேவைகள் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த மேற்படி புத்தரசி வழங்கும் வைபவம் நேற்று பூநகரி கமநல சேவை நிலையத்தில் நடைபெற்றுள்ளது இதில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதிஆணையாளர் பா.தேவரதன் பிரதம அதிதியாக கலந்து கொண்டிருந்தார் அத்துடன் கமநல சேவை நிலையத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் பிரதேச விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-5-315)



லேக் ஹவுஸ் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற தினகரனின் 92 ஆவது நிறைவு விழாவில் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் அவர்களின் சேவையைப் பாராட்டி கலாபூஷணம் யாழ் பரீட் இக்பால் பொன்னாடை அணிவித்து கௌரவிப்பதை படத்தில் காணலாம். அருகில் தினகரன் இணையாசிரியர் மர்லின் மரிக்கார், தினகரன் இணையத்தள ஆசிரியர் றிஸ்வான் சேகு முஹிதீன் ஆகியோரையும் படத்தில் காணலாம். (சி-8555)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்
## முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2024/2025 (அணி -I)

மேற்படி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனுமதிக்கான தகைமைகள்

விண்ணப்பதாரி கீழ்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. முன்பள்ளி ஆசிரியராக இருத்தல் வேண்டும்.
2. அத்துடன் க.பொ.த (சா/த) பரீட்சையில் தமிழ் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றுள் ஆகக்குறைந்தது ஏதாவது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
3. அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தேசிய தொழில் தகைமை மட்டம்-4 (NVQ-4) அல்லது அதற்கு சமனான வேறு ஏதேனும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கற்கைநெறிக் காலம் - இரண்டு வருடம் (நான்கு அரையாண்டுகள்-வார இறுதி நாட்கள்)
மொழிமூலம் - தமிழ்
கற்கை நிலையங்கள்: யாழ்ப்பாணம், கிளிநொச்சி
கற்கைநெறிக் கட்டணம் - திறமை அடிப்படையிலான முழுமையான புலமைப்பரிசில் நிதியுதவி வழங்கப்படும் (அனுசரணை: கல்வி அபிவிருத்திக் குழுமம்)
விண்ணப்பபடிவக் கட்டணம் - ரூபா 500.00

விண்ணப்பப் படிவத்தினை www.codl.jfn.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக தரவிறக்கம் செய்து, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் மக்கள் வங்கிக்கிளை கணக்கிலக்கம் 890012520003565 இற்கு விண்ணப்பப்படிவத்திற்கான கட்டணம் ரூபா. 500.00 இனைச் செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை இணைத்து, உதவிப்பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்.பல்கலைக்கழகம், திருநெல்வேலி எனும் முகவரிக்குத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களை நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "முன்பள்ளி கல்வி டிப்ளோமா கற்கைநெறி-2024/2025 (அணி-I)" எனக்குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 10.04.2024

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-8558)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## சேர் பொன் இராமநாதன் நினைவுப்பேருரை-2024

பேருரைத் தலைப்பு :
"Monsoon Steel': Serandib's Contribution to Global History of Science and Technology"
(பருவக்காற்று உருக்கு - விஞ்ஞான தொழில்நுட்ப உலக வரலாற்றின்பால் சேரன்துவிபத்தின் அளிக்கை)

பேருரை வழங்குனர் :
Prof. Gillian Juleff,
Department of Archeology,
University of Exeter.
(பேராசிரியர்.கிலியன் ஜீலெவ்,
தொல்லியற்றுறை,
எக்செட்டர் பல்கலைக்கழகம்.)

திகதி : 20.03.2024 (புதன்கிழமை)
பி.ப 3.00 மணி

நிகழ்விடம் : கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C-8556)


# இராசிபலன்

19.03.2024
பங்குனி 06, செவ்வாய்க்கிழமை
தசமி பின்னிரவு 4.12 மணிவரை
புநர்பூசம் முன்னிரவு 11.49 மணிவரை

சுபநேரம் -10.48-12.18 மணிவரை
இராகுகாலம்-3.18-4.48 மணிவரை
கார்த்திகை விரதம், சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
விசாகம், அனுசம்

வளவன்


மேஷம்

பணத்தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.


கடகம்

குடும்பத்தில் குதூகலம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செயற்படுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.


துலாம்

கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மறதியால் ஒரு சில வேலைகளைச் செய்யாமல் விட்டுவிடுவீர்கள்.


மகரம்

நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.


ரிஷபம்

உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பணம் பற்றிய கவலை உருவாகி மறையும், பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டிய நாள்.


சிம்மம்

குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், வீடு கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், நண்பர்கள் சந்திப்புண்டு.


கும்பம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், உறவினர் வழியில் எதிர்ப்புகள் கைகூடும், செய்தொழிலில் ஆர்வம் கூடும், போசன சுகமுண்டு.


மிதுனம்

எடுத்த காரியங்களை நிறைவேற்ற ஒரு முறைக்கு பல முறை அலைய நேரிடலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவான நாள்.


கன்னி

எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், ஆன்றோர் சந்திப்புண்டு.


தனுசு


இனத்தார் பகை மாற எடுத்த முயற்சி கைகூடும், போட்டிகளில் முன்னேற்றம் காணும் நாள், கடன்சுமை குறைய வழிவகை செய்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.


மீனம்

பகை விலகி பாசம் கூடும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

வெற்றிக்கு இன்றியமையாதவை தூய்மை, பொறுமை, விடாமுயற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித்திங்கள் பொங்கல் நேற்று சிறப்பாக ஆரம்பமானது. (படங்கள்:-சிவசாந்தன், மகாலிங்கம்)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு விடத்தல்தீவு கற்பகப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை இடம்பெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று செவ் வாய்க்கிழமை 9.30 மணி முதல் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெற்று இதனைத் தொடர்ந்து நாளை 9.32 மணிமுதல் 11.30 வரை உள்ள சுபநேரத்தில் மகா கும்பாபிஷேகம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெறவுள்ளது. (நி-5)

•••••••••••••

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி பங்குனி உத்தர நன்னாளான ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு நாளை மறுதினம் வியாழக்கிழமை கர்மாரம்பம் மற்றும் யாகம் இடம்பெற்று எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு எண்ணெய்க்காப்பு சாற்றுதலும் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு பாலக்காப்பும் இடம்பெற்று மறு நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணி முதல் 10.45 மணி வரை உள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது என ஆலய பிரதமகுரு அறிவித்துள்ளார். (நி-5)

# வல்வெட்டித்துறையில் வெதுப்பகத்திற்கு சீல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறைப் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த வெதுப்பகம் ஒன்றுக்கு நீதிமன்ற உத்தரவில் சீல் வைக்கப்பட்டுள்ளது.

சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிக்க கூடிய வகையில் உற்பத்திகளை களஞ்சியப்படுத்தியமை, விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்த பொதுச்சுகாதாரப்பரிசோதகர், வெதுப்பகத்திற்கு சீல் வைக்க கட்டளை கோரி விண்ணப்பம் செய்தார்.

விண்ணப்பத்தை ஆராய்ந்த மன்று, வெதுப்பகத்தில் திருத்த வேலைகளை முடித்து சுகாதார பரிசோதகர் அதனை உறுதிப்படுத்தும் வரையில் வெதுப்பகத்திற்கு சீல் வைக்குமாறு உத்தரவிட்டது. (நி-5-33)



திருநெல்வேலி சைவ சிறுவர் இல்லத்தில் உள்ள சிறார்களுக்கு கடந்த சனிக்கிழமை அன்று தரம் 6-11 வரையான கணிதபாட பயிற்சி நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. கனடாவில் வாழும் பேரின்பநாதன் இராகுலன் தனது தந்தையின் நினைவாக கணித பாட பயிற்சி நூல்களினை வழங்கி மாணவர்களை ஊக்கப்படுத்தினார்.

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கடந்த 14 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது

எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 23 ஆம்திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (நி-5)

## நீர்த்தொட்டி கையளிப்பு

(கரணவாய்)

புலோலி, நவிண்டில் மற்றும் புத்தூர் பகுதியில் நீண்ட காலமாக வீட்டில் நீர்த்தொட்டியின்றி பெரும் கஷ்டங்களையும் துயரங்களையும் எதிர்கொண்டு வந்த முன்னாள் போராளிகளின் குடும்பங்களிற்கு தாயகம் நோக்கிய நேசக்கரங்கள் அமைப்பு ஊடாக புலம்பெயர் தமிழர்கள் முன்வந்து வழங்கிய நிதியில் நீர்த்தொட்டி அமைத்து கொடுக்கப்பட்டது. (நி-5-60)

# சுகாதார சீர்கேட்டுடன் ஐஸ்கிறீம் விற்பனை

## 42 ஆயிரம் தண்டம் விதித்த மன்று

(யாழ்ப்பாணம்)

பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டியின்போது சுகாதார சீர்கேட்டுடன் ஐஸ்கிறீம் விற்பனை செய்த நிறுவனத்தின் உரிமையாளருக்கு 42 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுழிபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் விளையாட்டு போட்டியின் போது, சுகாதார சீர்கேட்டுடன் ஐஸ்கிறீம் விற்பனையில் ஈடுபட்டமை தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் 7 குற்றச்சாட்டுக்களை முன் வைத்து உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் போது உரிமையாளர் குற்றங்களை ஏற்றுக் கொண்டதை அடுத்து உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று 42 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. (நி-5-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 | 250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 | 185 |
| பச்சைமிளகாய் | 250 | 220 | 300 | 300 | 300 |
| தக்காளி | 200 | 200 | 250 | 250 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 140 | 150 | 200 | 130 |
| கோவா | 320 | 300 | 350 | 400 | 250 |
| கரட் | 400 | 400 | 450 | 500 | 320 |
| பூசணி | 200 | 200 | 200 | 250 | 150 |
| புடோல் | 150 | 150 | 150 | 150 | 120 |
| வாழைக்காய் | 200 | 160 | 150 | 250 | 140 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 300 | 200-300 |
| பெரிய வெங்காயம் | 550 | 600 | 550 | 600 | 450 |
| பாகற்காய் | 400 | 350 | 400 | 400 | 350-450 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 400 | 100-150 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 200 | --- |
| பயற்றங்காய் | 350 | 240 | 250 | 300 | 200-280 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 350 | 200 |
| பீற்றூட் | 300 | 200 | 300 | 300 | 250 |
| கறிமிளகாய் | 400 | 350 | 300 | 400 | 250-350 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 800 | 1200 | 500-900 |
| போஞ்சி | 400 | 200 | 400 | 350 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 100 | --- | 200 | --- |
| கீரை - 1 பிடி | 80 | 120 | 80 | 80 | 50 |
| தேசிக்காய் | 150 | 200 | 200 | 300 | 80-150 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 80-120 | 50-100 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | 400 | --- |
| வெங்காயப்பூ | 150 | 200 | 200 | 250 | 100 |
| முள்ளங்கி | 100 | 100 | 150 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 120 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | --- | --- | --- | 80 |

## சண்டிலிப்பாய் பகுதியில்

# உணவு கையாள்வோருக்கு மருத்துவ பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் உணவுகையாள்வோரிற்கான மருத்துவ பரிசோதனையும் நெருப்பு காய்ச்சல் தடுப்பு மருந்தேற்றலும் அண்மையில் இடம்பெற்றது.

அதன்போது உணவு கையாள்வோர் 95 பேர் பரிசோதிக்கப்பட்டனர்.

அதேவேளை உணவு கையாள்வதில் இருந்து உணவு வழங்கும் வரையிலான சுகாதாரம் சார் செயற்பாடுகள் தொடர்பிலும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (நி-5-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சர்வதேச மகளிர் தினம், தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் மேற்தர கிளையில் முகாமையாளர் திருமதி சித்ரா தயானந்தன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக, யாழ். பல்கலைக்கழக வளவாளரும் சமூகசேவகியுமான திருமதி சாவித்திரிதேவி இரவிச்சந்திரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக வட பிராந்திய முகாமையாளர் நடராஜர் பகீரதன் அவர்களும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் வங்கியின் வாடிக்கையாளர்கள், ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் கிளை ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## வெடுக்குநாறிமலை விவகாரம்

# தமிழர்களுக்கு எதிரான இனஅழிப்பின் திட்டமிட்ட செயற்பாடு

**பிரித்தானிய தமிழர் பேரவை**

(லண்டன்)

வெடுக்குநாறிமலை ஆலய சிவராத்திரி வழிபாட்டு நிகழ்வில் பொலிஸாரால் ஏற்படுத்தப்பட்ட தடங்கல்கள் தொடர்பில் பிரித்தானிய தமிழர் பேரவை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் பிரித்தானிய தமிழர் பேரவை மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த வெடுக்குநாறி மலை ஆலய சிவராத்திரி வழிபாட்டு நிகழ்வில் கலந்து கொண்ட ஆலய பூசகரின் கைதும் பக்தர்களின் கைதும் கண்டனத்துக்கு உரியது டன் இவர்கள் அனைவரும் உடனடியாக விடுதலை செய் யப்பட வேண்டும்.

மேலும் நீதிமன்ற தீர்ப் பின் பிரகாரம் விக்கிரகங்கள் மீள கையளிக்கப்பட்டு, அவற்றினை அபகரித்த குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வேண்டிய அரச நிர்வாகம் அதற்கு மாறாக பல்லாண்டு காலமாக வழிபட்டு வரும் தமிழ் மக்களின் மீது அரச படைகளை ஏவி விட்டு அச்சுறுத்த முனைகின்றது. அடக்குமுறைகள் தான் எம்மக்களை போராட நிர்ப்பந்தித்தது என்ற யதார்த்தத்தை சிங்களதேசம் புறக்கணித்தபடியால் தான் இன்று அது கையறு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறன கைதுகளும் தமிழர்களின் வழிபாட்டு உரிமைகளை தடுத்து வழி பாட்டு தளங்களை அபகரிப்பதும் தொல்லியல் திணைக் களம் போன்ற அரச இயந் திரத்தின் அங்கங்களை ஏவி விடுவதும் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலத் தினை சிதைத்து துண்டம் துண்டமாக்கி அவற்றை சிங்கள பௌத்த அடையாளங்களால் உருமாற்றம் செய்து தொடர்ச்சியான நிலப்பரப்பினை கொண்ட தமிழர் தாயகம் என்ற எம் உரிமை கோரிக்கையை சிதைப்பது இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பின் திட்டமிட்ட மூலோபா யம் ஆகும்.

இவ்வாறான தொடரும் நில ஆக்கிரமிப்பு, சமூக பொருளாதார அடிப்படைகளில் தமிழர் தேசத்தினை சிதைத்து பலவீனப்படுத்தல், தங்கு நிலையில் வைத்திருத்தல் தாயகத்தில் தமிழ் மக்கள் வாழ முடியாத சூழ் நிலைகளை உரு வாக்கி அவர்களை மண்ணிலிருந்து வெளியேற்றுவது தமிழர் அரசியல் பிரதிநிதித்துவத்தை சிதைப்பதும் செயலிழக்கச் செய்வதுமான செயற்பாடுகளை இடைநிறு த்தி தம்மைத் தாமே நிர்வ கிக்கக் கூடிய இடைக்கால நிர்வாகப் பொறிமுறைறினை ஒன்றினை உடனடியாக உருவாக்குமாறு இந்தியா உட்பட சர்வதேச தளப்பரப்பில் முக்கிய உறுப்பு நாடுகளிடம் எமது இக்கோரிக்கையை முன் வைக்கின்றோம். (நி-5)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திரு.விஜயகுமார் ஞானசிங்கம்**
(NDT, BEd, MEd)

**திருமதி.நீலாயதாட்சி சதீஸ்குமரன்**
(NDT, BEd, MEd)

எமது பாடசாலை ஆசிரியர்களான திரு.விஜயகுமார் ஞானசிங்கம், திருமதி நீலாயதாட்சி சதீஸ்குமரன் ஆகியோர் 16.03.2024 அன்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு நிகழ்விலே கல்வியில் முதுமாணி (MEd) பட்டத்தினை பெற்றமையை இட்டு பாராட்டி வாழ்த்துவதோடு மென்மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற மனதார வாழ்த்துகின்றோம்.

(134)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.**



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அனுசம்
உயரம்: 6'
தகைமை/தொழில்: கணனி வடிமைப்பாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/14190

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பரணி
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: வாகன சாரதி
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள பெண்
தொ.இ: B/14191

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம் : மிருகசீரிடம்
உயரம்: 178 cm
தகைமை/தொழில்: Bsc, நிதி நிறுவனம்
எதிர்பார்ப்பு : படித்த வேலையுள்ள பெண்
தொ.இ: B/14196

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம் : ஆயிலியம்
சூரி செவ் 10 இல்
உயரம்: 5'8"
தகைமை/ தொழில்: A/L office Peon
எதிர்பார்ப்பு: படித்த மணமகள்
தொ.இ: B/14203

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1994 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: BA, Pvt Company
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/14366

பிறப்பு-1996 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: - 10
உயரம் : 159cm
தகைமை/தொழில்:Bachelor of Bio Systems Technology, Micro Biologist
எதிர்பார்ப்பு: Engineer, Software Engineer
தொ.இ: G/14382

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: கேட்டை
உயரம் : 5'33
தகைமை/தொழில்: Bsc(IT), Associate Software Engineer (Pvt)
எதிர்பார்ப்பு: விஞ்ஞான துறை சார்ந்த பட்டதாரி அல்லது அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/14388

பிறப்பு -1989 இந்து
நட்சத்திரம் - உத்தரம்
கி.பா: 33 1/2
உயரம் : 5'2"
தகைமை/தொழில்: MBBS Doctor,
எதிர்பார்ப்பு : Engineer, Accountant
தொ.இ: G/14391

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**

**பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்திய மக்களவைத் தேர்தல் ஏப்ரல் 19 ஆம் திகதி

### தலைமைத் தேர்தல் ஆணையர்



(டில்லி)

இந்தியாவின் 18 ஆவது மக்களவைத் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தலைமை தேர்தல் ஆணையர் ராஜீவ் குமார் அறிவித்துள்ளார்.

அதற்கமைய மக்களவை தேர்தலை 7 கட்டங்களாக நடத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி முதற்கட்டமாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வாக்குப்பதிவுகள் நடைபெறவுள்ளது.

ஏப்ரல் 19ஆம் திகதி தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக 39 தொகுதிகளுக்கும் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

வாக்கு எண்ணிக்கை ஜூன் 4ஆம் திகதி நடைபெறும்என்றுதேர்தல்ஆணையம் அறிவித்துள்ளது.

தொடர்ந்து மக்களவைத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு ஏப்ரல் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

குறித்த நாளில் 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 89 மக்களவைத் தொகுதிகளுக்கு வாக்குப்பதிவுகள் நடைபெறவுள்ளது.

மேலும் மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு மே 7ஆம் திகதி 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 94 மக்களவைத் தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளது.

நான்காம் கட்ட வாக்குப் பதிவு மே 13ஆம் திகதி 10 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள 96 மக்களவைத் தொகுதிகளில் நடைபெறவுள்ளது

தொடர்ந்து ஐந்தாம் கட்ட தேர்தல் மே 20ஆம் திகதி 49 தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளது.

ஆறாம் கட்டத் தேர்தல் மே 25ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள 57 மக்களவைத் தொகுதிகளில் நடைபெறவுள்ளது.

இறுதியாக ஏழாம் கட்ட தேர்தல் வாக்கு பதிவு ஜூன் முதலாம் திகதி 57 மக்களவைத் தொகுதிகளுக்கு நடைபெறவுள்ளது.

ஏழு கட்டங்களாக பதிவாகும் வாக்குகளை எண்ணும் பணிகள் எதிர்வரும் ஜூன் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (நி-5)

## பாகிஸ்தானுக்கு உளவுக்கப்பலை வழங்கிய சீனா



(பீஜிங்)

பாகிஸ்தான் கடற்படையினருக்கு முதல் உளவுக் கப்பலை உருவாக்குவதற்கு சீனா அதிகளவு உதவிகளை வழங்கியுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பி.என்.எஸ். ரிஸ்வான் என்ற 87 மீற்றர் நீளமுள்ள குறித்த கப்பல் ஏவுகணைகள் ஏவுவதை கண்காணிப்பதற்கும் உளவுத்துறையின் சேகரிப்பு பணிகளை மேற்கொள்ளும் நோக்கிலும் அமைக்கப்பட்டுள்ளது.

நவீன வசதிகள் கொண்ட இது போன்ற கப்பல்களை அமெரிக்கா, இந்தியா, சீனா, ரஷ்யா பிரான்ஸ் ஆகிய ஒரு சில நாடுகள் மட்டுமே வைத்துள்ளன. தற்போது பாகிஸ்தானுக்கு அந்தக் கப்பலை சீனா வழங்கி உள்ளது.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் சீன கப்பல் சுற்றி வரும் நிலையில் பாகிஸ்தானுக்கு கப்பலை வழங்கி சீனா உதவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## வரலாற்று வெற்

## ரஷ்ய ஜன

### (மொஸ்கோ)

### ரஷ்ய ஜனாதிபதி தேர்தலி தற்போதைய ஜனாதிபதி அபார வெற்றி பெற்றுள்ளார்.

இதன் மூலம் 71 வயதாகும் புடின் அடுத்த ஆறு ஆண்டுகளுக்கு ரஷ்யாவின் ஜனாதிபதியாக பொறுப்பு வகிப்பது உறுதியாகியுள்ளது. இந்தத் தவணையை அவர் நிறைவு செய்தால் கடந்த 200 ஆண்டுகளில் ரஷ்யாவில் நீண்டகாலம் பதவி வகித்த ஜனாதிபதி என்ற பெருமை அவரைச் சாரும். தற்போது முன்னாள் ஜனாதிபதி ஜோசஃப் ஸ்டாலின் அந்தச் சிறப்புக்குரியவராகப் போற்றப்படுகிறார்.

நேற்று முன்தினம் வெளியான வாக்களிப்புக்குப் பிந்திய கருத்துக் கணிப்பு முடிவுகளில் புடினுக்கு 87.8 விழுக்காட்டு வாக்குகள் பதிவாயின. சோவியத் யூனியனிலிருந்து பிரிந்த பிறகு ரஷ்ய ஜனாதிபதி ஒருவருக்குப் பதிவான ஆக அதிக எண்ணிக்கையிலான வாக்குகள் ஆகும்.

மற்றொரு கருத்துக் கணிப்பு நிறுவனம் புடினுக்கு 87 விழுக்காட்டு வாக்குகள் பதிவானதாகத் தெரிவித்தது.

ஆனால் ரஷ்ய ஜனாதிபதி தேர்தல் சுதந்திரமானதோ நியாயமானதோ அன்று என அமெரிக்கா, ஜேர்மனி, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் கூறியுள்ளன.

அரசியல் எதிர்ப்பாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டதையும் கருத்துச் சுதந்திரம் முடக்கப்பட்டதையும் அவை சுட்டிகாட்டியுள்ளன.

புடினை எதிர்த்துக் களமிறங்கியோரில் கம்யூனிஸ்ட் வேட்பாளர் நிக்கோலாய் கரிடோனோவ் நான்கு விழுக்காட்டிற்குக் குறைவான வாக்குகளுடன் இரண்டாம் நிலையிலும், புதியவரான விளாடிஸ்லாவ் தவான்கோவ் மூன்றாம் நிலையிலும் லெனோய்ட் ஸ்லட்ஸ்கி நான்காம் நிலையிலும் இருப்பதாகக் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

## ஆப்கானில் கோர விபத்து 21பேர் பலி, 38 பேர் காயம்



(காபூல்)

ஆப்கானிஸ்தானின் ஹெல்மண்ட் மாகாணத்தின் கெராஸ்க் மாவட்டத்தில் பேருந்து ஒன்று எண்ணெய் தாங்கி வாகனம் ஒன்றுடன் மோதியதில் 21பேர் உயிரி துள்ளதுடன் 38பேர் காயமடைந்துள்ளதாக நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டள்ளன. குறி விபத்துச் சம்பவமானது நேற்று முன்தினம் இ பெற்றுள்ளது. சம்பவத்தின்போது ஹெறாத் நகரிலிரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...வெற்றியை பதிவுசெய்த ...னாதிபதி புடின்

## ...தேர்தலில் அந்நாட்டின் ...திபதி விளாடிமிர் புடின் ...ள்ளார்.



...றன.

மொஸ்கோவில் வெற்றியுரை ஆற்றிய புடின், உக்ரைனில் மேற்கொள்ளப்படும் 'சிறப்பு ராணுவ நடவடிக்கை' தொடர்பான அம்சங்களுக்குத் தீர்வு காண முன்னுரிமை தரப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் ரஷ்ய இராணுவத்தை வலுப்படுத்தவும் அவர் உறுதியளித்தார்.

ரஷ்யத் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடைபெற்றதாகத் தாம் கருதுவதாகச் செய்தியாளர்களிடம் கூறிய புடின், நவால்னி-தரப்பினர் தம்மை எதிர்த்து நடத்திய போராட்டங்களால் தேர்தல் முடிவில் எந்தப் பாதிப்பும் இல்லை எனத் தெரிவித்தார்.

ரஷ்யாவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற மூன்று நாட்களில் உக்ரைன், ரஷ்யாவின் எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் உட்பட சில பகுதிகளில் தாக்குதல் மேற்கொண்டது.

அதற்குத் தக்க தண்டனை அளிக்கப்படும் என்று புடின் சூளுரைத்துள்ளார். (நி-5)

# 2 அடி பல்லி கடித்ததில் உரிமையாளர் பலி

## அமெரிக்காவில் சம்பவம்

(வோஷிங்டன்)

2அடி வளர்ப்புப் பல்லி கடித்ததில் உரிமையாளர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின் கொலராடோ மாகாணத்தை சேர்ந்த கிறிஸ்டோபர் வார்டு (52) என்பவர் 2 கிலா மான்ஸ்டர்ஸ் வகை பல்லிகளை வளர்த்து வந்திருக்கிறார்.

அந்த பல்லிகளில் ஒன்று கடந்த பெப்ரவரி மாதம் உரிமையாளரை 4 நிமிடங்கள் வரை கடித்துள்ளது. உடனேயே அவருக்கு அறிகுறிகள் தென்படத்தொடங்கின. தொடர்ந்து பல முறை வாந்தி எடுத்திருக்கிறார். சுவாசமும் நின்றுள்ளது. அவர் 2 மணி நேரம் வரை சுயநினைவற்று போயிருக்கிறார். உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின் அவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் இந்த பல்லிகள் விஷத்தன்மை வாய்ந்த ஊர்வன வகையை சேர்ந்தவை. இவற்றின் கடியானது வலியை அதிகரிக்கச் செய்ய கூடியவை என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (நி-5)

# நரம்பு மண்டலத்தை பாதிக்கும் நோய்கள் அதிகரிப்பு

(வோஷிங்டன்)

உலக அளவில் நரம்பு மண்டலத்தை பாதிக்கும் நோய்கள் அதிகரித்திருப்பதாக அண்மை ஆய்வொன்று தெரிவிக்கிறது.

அந்தவகையில் பக்கவாதம், ஒற்றைத் தலைவலி, முதுமை மறதி ஆகியவை அதிகமானோரைப் பாதிப்பதாக ஆய்வு சொல்கிறது.

2021 இல் உலகில் 43 வீதம்அதாவது 3.4 பில்லியனுக்கும் அதிகமானோர் நரம்பியல் பிரச்சினையைச் சந்தித்திருக்கின்றனர்.

இது நிபுணர்களின் ஊகத்தைக் காட்டிலும் மிக அதிகம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட Institute for Health Metrics and Evaluation (IHME) அமைப்பு வழிநடத்திய ஆய்வில் நூற்றுக்கணக்கான ஆய்வாளர்கள் கலந்துகொண்டனர்.

பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை கடந்த முப்பது ஆண்டுகளில் 59 வீதமாக அதிகரித்துள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

அதேசமயம் உலக மக்கள் தொகை விரைவாக அதிகரிப்பதும் மூத்தோர் எண்ணிக்கை கூடுவதும் இதற்கு முக்கிய காரணங்களாக கூறப்படுகின்றது. (நி-5)

# ...பத்து ...காயம்



...21பேர் உயிரிழந்துள்ளதாக அந் ...ட்டுள்ளன. குறித்த ...முன்தினம் இடம் ...றாத் நகரிலிருந்து தலை நகர் காபூலுக்குப் பயணித்த மோட்டார்சைக் கிள், எரி பொருள் வாகனம் மற்றும் பேருந்து ஆகியவை காந்தஹார் - ஹேறாத் நெடுஞ்சாலையில் விபத்துக்குள்ளாகியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள் மீது மோதிய பின்னர் பேருந்தின் சாரதி கட்டுப்பாட்டை இழந்து எதிர்திசையில் பயணித்த எண்ணெய் வாகனம் மீது மோதியுள்ள நிலையில் தீ பரவலும் ஏற்பட்டுள்ளது. இதன் போது காயமடைந்த 38 பேரில் 11 பேர் பலத்தகாயங்களுடன் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஹெல்மண்ட் மாநில பொலிஸ் தலைமைப் பேச்சாளர் ஹச துல்லா ஹக்ஷகானி தெரிவித்துள்ளார். (நி-5)

# ஜனாதிபதியாக என்னை தேர்வு செய்யாவிட்டால் இரத்தக்களறி ஏற்படும் - ட்ரம்ப் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஜனாதிபதித் தேர்தலில் தன்னை ஜனாதிபதியாக தேர்வு செய்யாவிட்டால் இரத்தக்களறி ஏற்படும் என முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சர்ச்சைக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக்கட்சி சார்பில் ஜோ பைடனும் குடியரசு கட்சி சார்பில் டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடவுள்ள... உயதியாகியுள்ளது. இந்நிலையிலேயே ஓஹியோ மாகாணத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசிய டொனால்ட் ட்ரம்ப் தன்னை ஜனாதிபதியாக தேர்வு செய்யாவிட்டால் இரத்தக்களறி ஏற்படும் என்று எச்சரித்துள்ளார்.

அமெரிக்க மக்கள் ட்ரம்பின் தீவிரபோக்கினை தொடர்ந்து நிராகரித்துவருவதால் நவம்பர் தேர்தலில் அவர்கள் அவரை நிராகரிக்கப் போகின்றனர் என ஜனாதிபதி ஜோ பைடனின் பிரச்சார பிரிவின் பேச்சாளர் ஜேம்ஸ் சிங்கெர் தெரிவித்துள்ளார்.




என அமெரிக்க மக்கள் அவரின் வன்முறை மீதான விருப்பம், பழிவாங் கும் குணம் ஆகியவற்றை நிராகரிக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 அம்ச செயற்றிட்டத்தை செயற்படுத்த ஐ.எம்.எப் தீர்மானம்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை புதுப்பிக்க 16 அம்ச செயற்றிட்டத்தை செயற்படுத்த சர்வதேச நாணய நிதியம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உள்ளிட்ட மத்திய வங்கிகளின் தலைவர்களுக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வெளிப்படையான அரச இயந்திரமொன்றை ஸ்தாபிப்பது உட்பட இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை பலப்படுத்துவதை முதற்கட்டமாக செயற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கை சார்பில் 14 அம்ச கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த ஒப்புக் கொண்டுள்ளதுடன் ஏனைய இரண்டு அம்சங்களை படிப்படியாக அமுல்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

இலங்கை சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் போன்றவற்றில் இடம்பெறும் ஊழல் மோசடிகளை நிறுத்துவதற்கான செயன்முறை நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் இவ்விரு விடயங்களையும் நிறைவு செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பாராளுமன்றம் மீதான மக்களின் நம்பிக்கை வீழ்ச்சி

(கொழும்பு)

பாராளுமன்றம் மற்றும் அரசியல் கட்சிகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கை குறைவடைந்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது

இலங்கையில் ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது

இதன்படி பாராளுமன்றம் மீதான மக்களின் நம்பிக்கை 22 சதவீதமும் அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கை 19 சதவீதம் மாத்திரமே காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது

இதேவேளை ராணுவம் மற்றும் நீதிமன்றங்கள் மீதான மக்களின் நம்பகத்தன்மை பேணப்படுவதாகவும் தெரியவந்துள்ளது

இதனிடையே பெரும்பான்மையான மக்கள் ஜனநாயக ஆட்சியை ஆதரிக்கின்ற போதிலும் பத்தில் ஒரு வீதமானவர்கள் சர்வாதிகார ஆட்சியை விரும்புவதாகவும் ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (நி-5)

# கோப் குழுவில் இருந்து விலகும் எரான் எம்.பி

(கொழும்பு)



பொது விவகாரங்களுக்கான குழு அல்லது கோப் குழுவின் உறுப்புரிமையில் இருந்து விலகவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சபாநாயகரிடம் தாம் இதற்கான கடிதத்தை கையளித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

நிலையிற் கட்டளையில் மாற்றங்களை ஏற்படுத்த தீர்மானித்தோம். ஆனால் அரசாங்கம் விரும்பவில்லை.

இதுவரை சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் எந்த முன்னேற்றங்களும் இல்லை. கோப் பேசும் இடமாக இருந்து வருகிறதே ஒழிய நடவடிக்கைகள் எடுக்கும் எந்த நடைமுறையும் அதில் இல்லை.

இந்த அரசாங்கம் கோப்பை பயன்படுத்தி மோசடிகள், ஊழல் திருட்டுகளை மூடி மறைக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்து வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# கொழும்பை வந்தடைந்தது எம்பியன்ஸ் சொகுசு ரக கப்பல்

(கொழும்பு)

எம்பியன்ஸ் என்ற சொகுசு ரக கப்பல் நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

1131 பயணிகள் மற்றும் 565 பணியாளர்களுடன் தாய்லாந்தின் ஃபூகெட்டில் இருந்து குறித்த கப்பல் நாட்டுக்கு வருகை தந்துள்ளது.

அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா மற்றும் ஜேர்மன் நாட்டு பயணிகள் அந்தக் கப்பலில் வருகைதந்துள்ளனர்.

குறித்த கப்பலில் வருகை தந்த பயணிகள் கொழும்பு, கண்டி மற்றும் காலி ஆகிய நகரங்களுக்குச் செல்லவுள்ளனர். (நி-5)

# இன்று ஒரு தகவல் 69



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இயற்கையின் ரகசியம்

உங்களுக்கு எரிச்சல் எற்படுகிற மாதிரி ஒரு கேள்வி கேட்கட்டுமா? நெல்லிக்காய் ஏன் நெல்லிக்காய் மாதிரி இருக்கிறது? அது ஏன் அவரைக்காய் மாதிரி இருக்கக் கூடாதா? உங்களுக்கு கோபம் ஏற்படுவதற்குள் நானே சொல்ல வந்த விடயத்திற்கு வந்துவிடுகின்றேன்.

இயற்கை இந்த உருவங்களிலே சில ரகசியங்களை மறைத்து வைத்திருகின்றது. நமது உடம்பிற்குள்ளே எத்தனையே உறுப்புக்கள் இருக்கின்றது. நமது உடம்பிற்குள் இருக்கின்ற சில உறுப்புக்களுக்கும் காய்கள், பழங்களின் உருவத்திற்கும் சில ஒற்றுமை இருக்கின்றது. உதாரணமாக நமது உடம்பிலே இருதயம் இருக்கிறது தாமரை மொட்டும் அது மாதிரியே இருக்கின்றது. நமது உடம்பிலே சிறுநீரகம் இருக்கின்றது அவரை விதையும் முந்திரி விதையும் அது மாதிரியே இருக்கின்றது.

இயற்கையிலே அமைந்திருக்கின்ற இந்த உருவ ஒற்றுமை தற்செயலாக அமைந்ததாக இருக்குமா? இல்லை இதற்கு ஏதாவது அர்த்தம் இருக்குமா? ஆயுர்வேதம் இதைப்பற்றி ஓரளவுக்கு ஆராய்ச்சி செய்து இருக்கின்றது. அதாவது இந்த உருவ ஒற்றுமை சம்பந்தமாக நமது முன்னோர்கள் கொஞ்சம் ஆராய்ச்சி செய்து இருக்கின்றார்கள். இப்போது Indian walnut என்று சொல்லுகின்றோமே...

வாதுமையின் உருவம் எப்படி என்றால்? மேலே கடினமான ஓடு உள்ளே அந்த ஓட்டிலே ஒட்டாமல் சுளை தனியாக இருக்கும். நமது தலைக்கும் இந்த அமைப்புக்கும் ஒரு ஒற்றுமை இருக்கின்றது. மனிதனுக்கு மண்டை ஓடு கடினமாக இருக்கின்றது. உள்ளே மூளை - மண்டை ஓட்டிலே ஒட்டாமல் தனியாக இருக்கின்றது. ஒற்றுமை புரிகின்றதா? வாதுமையோட மேல் ஓடு தான் மண்டை ஓடு அதற்குள்ளே இருக்கின்ற சுளை தான் மூளை. சரி அதற்கு இப்ப என்ன என்று தானே கேட்கின்றீர்கள். மத்திய கிழக்கு நாடுகளிலே இருக்கின்றவர்களும் ரஷ்யாவிலே வட பகுதியிலே இருக்கி ன்றவர்களும் இந்த "வாதுமை"யை எதற்கு உபயோகப்படுத்துகின்றார்கள் தெரியுமா? மூளை வளர்ச்சிற்கு மருந்தாக உப்யோகப்படுத்துகின்றார்கள்.

அப்படி என்றால் உருவத்தோட ஒற்றுமைக்கும் அதோட ஒற்றுமைக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கின்ற மாதிரி தெரியவில்லையே. அது தான் இயற்கை மறைத்து வைத்திரு க்கின்ற ரகசியமாக இருக்குமோ?

அவரை விதை இருக்கின்றதல்லா. அது சிறுநீரகம் மாதிரி தானே இருக்கின்றது. அமெரிக்காவிலே ஒரு பெரிய இனம் இருக்கின்றது. அதற்கு பெயரே சிறுநீரக போஞ்சி.

அவரை விதையும் நம் உடம்பிலே இருக்கிற சிறுநீரகமும் உருவத்திலே ஒரே மாாதிரியாக இருக்கிறது. இப்போது ஆச்சரியம் என்னவென்றால்... சிறுநீரகத்தை சரியாக வேலை செய்ய வைப்பதற்கு அவரை விதையிலே இருந்து மருந்து தயார் செய்யிறாங்க!

அதாவது இந்த அவரை விதை ஒரு சிறந்த Diuretic ஆக பயன்படுகிறது! அது மட்டுமில்லை இரத்தில் உள்ள சர்க்கரை அளவை குறைப்பதற்கு அவரைத் தோடுகள் தான் உபயோகப்படுகிறது!

அது இருக்கட்டும்....மனிதனுடைய உயிரணுவை Sperm என்று சொல்லுவார்கள். நுணுக்குக்காட்டி மூலமாக அதைப் பார்க்கலாம்.தலை, நடுப்பகுதி, வால் இப்படி மூன்று பகுதி இருக்கும் அதில் ஆண், பெண் உயிரணுக்கள் ஒன்று சேர்ந்த உடனே அந்த Spermன் நடுப்பகுதியும் வாலும் தனியாக போய்விடும். தலைப்பகுதி மட்டும் இருக்கும்.

மனிதன் என்கிற பயிர் உருவாக ஆரம்ப விதை இதுதான்!

இது எப்படி இருக்கும் தெரியுமா? எள் விதை மாதிரி இருக்கும்! நம்ம முன்னோர்கள் ஆண்-பெண் மலட்டுத் தன்மையைப் போக்குவதற்கு இந்த எள்ளைத் தான் கொடுக்கிறது வழக்கம்.பின்பு இதய கமலம் என்று சொல்லுவோம். கமலம் என்றால் தாமரைப்பூ! அது காலையில் மலர்கிறது. மதியம் விரிகிறது மாலையிலே சுருங்குகிறது!

எமது இதயமும் அதே மாதிரி சுருங்கி விரிகிறது!இதயத்தின் நடவடிக்கையும் தாமரையின் நடவடிக்கையும் ஒன்றாக இருக்கும் இல்லையா? இப்போது பாருங்கள்.. இருதய பலவீனத்தைப் போக்குவதற்கு தாமரைதான் உபயோகப்படுகிறது!

கொய்யாப்பாழம் இருக்கிறதே. அதை தலைகீழாக வைத்துப் பார்த்தால் அதோட உருவமும் கர்ப்பப்பையோட உருவமும் ஒத்து இருக்கும். அதுதான் கருப்பைக் கோளாறுகளை சரி செய்வதற்கு கொய்யாப்பழம் தான் உபயோகப்படுகிறது. நெல்லிக்காயை கண்ணுக்கு நேராக வைத்துப்பாருங்கள்! நடுவிலே விதை மூழ்கி இருக்கிற மாதிரி தெரியும். எமது கண்ணும் அப்படித்தான். கருவிழி நடுவிலே இருக்கிறது!

கண் சம்பந்தமான மருந்து வகைகள் நெல்லிக்காயிலே இருந்து தயாராகிறது.

அவரை விதை மாதிரியே முந்திரி பருப்பிலே இருந்தும் சிறுநீரகம் சம்பந்தப்பட்ட மருந்து தயார் செய்கிறார்கள்! இதனாலே நான் என்ன சொல்கிறேன் என்றால் எமது உடம்பிலேதான் பிரபஞ்சம்.. இந்த பிபஞ்சம் தான் எமது உடம்பு! என்ன அதிகமாக குழுப்புகின்றேனா? படைப்பு இரகசியங்கள் ஏராளம் இருக்கிறது... இதுவரைக்கும் நாம் புரிந்து கொண்டது ஒரு துளிதான்.

இப்போது நான் உங்களிடம் சொன்னதை எல்லாம் கொஞ்ச நாளைக்கு முன்னால் என் நண்பன் ஒருத்தனிடம் அவசரமாக சொல்லிக்கொண்டு இருந்தேன். அவன் குதர்க்கமா ஒரு கேள்வி கேட்டான்.

அவரைக்காய், நெல்லிக்காய், கொய்யாக்காய் என்று சொல்லுகிறாய். அது சரி. பூசணிக்காய் ஏன் பந்து மாதிரி இருக்கிறது. புடலங்காய் ஏன் பாம்பு மாதிரி இருக்கிறது? இப்படியெல்லாம் கேட்க ஆரம்பித்து விட்டான். திகைத்துப்போய் விட்டேன். தெரிந்ததை எலலாம் சொல்லலாம் தெரியாததை எப்படி சொல்ல முடியும்! ஆனைக்கு அறம் என்றால் குதிரைக்கு குற்றமா?

ஏன் சார்... நீங்களே சொல்லுங்க! உருளைக்கிழங்கு போண்டா என்றால் உள்ளே உருளைக் கிழங்கு [illegible] மைசூர் போண்டா என்றால் உள்ளே மைசூரா இருக்கும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் இன்று வேலை நிறுத்த போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இன்று முழு நாளும் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தினையும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் பல்கலைக் கழக ஊழியர்சங்கம் மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் 11.03.2024 மற்றும் 18.03.2024 திகதியிடப்பட்ட பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்ட கடிதங்களின் பிரகாரம் இன்று முழுநாளும் அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் பல்கலைக் கழக கல்விசாராப் பணியாளர்களின் சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகளிற்கு உரிய கால அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வினை வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் உடனடித் தீர்வினை வேண்டியும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (நி-5-33)

## ரங்கன் குடியிருப்பு கிராமத்திற்கு நீண்ட காலத்தின் பின் போக்குவரத்து சேவை

(தருமபுரம்)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட ரங்கன் குடியிருப்பு கிராமத்திற்கு நீண்டகாலத்தின் பின் நேற்றையதினம் பேருந்து சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீண்ட காலமாக மக்கள் தமது கிராமத்திற்கான பேருந்து சேவையை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தமைக்கமைய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் குறித்த தனியார் பேருந்து சேவை முன்னெடுக்கப் பட்டது. (நி-5-316-315)

## சுதந்திரபுரத்தில் கசிப்பு விற்பனை அதிகரிப்பு கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கிராமத்தில் கசிப்பு விற்பனை அதிகரித்து காணப்படுவதால் குடும்ப வன்முறைகளும் அதிகரித்து காணப்படுகிறது. கசிப்பு விற்கப்படும் இடங்கள் தொடர்பாக பொது மக்களினால் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை பொலிஸார் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவில்லை என அக்கிராம மக்கள் தெரிவித்தனர்.

கசிப்பு விற்பனையில் ஈடுபடுபவர்கள் அதிகரித்துள்ளதாகவும் கசிப்பு விற்பனை தொடர்பாக பொலிஸாருக்கு வழங்கப்படும் தகவல்கள் கசிப்பு விற்பவர்களுக்கு தெரிந்துவிடுவதன் காரணமாக மோதல் நிலைமைகளும் சில வேளைகளில் ஏற்படுவதன் காரணமாக சுதந்திரபுரம் கிராமத்தில் இருந்து கசிப்பினை ஒழிப்பதில் நெருக்கடிகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சுதந்திரபுரத்தில் நடைபெறும் கசிப்பு விற்பனையினை கட்டுப்படுத்துவதற்கு புதுக்குடியிருப்பு பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-350)

## யாழில் திடீர் சுற்றிவளைப்பு சிக்கிய பல்பொருள் அங்காடி

### 1 லட்சத்து 80 ஆயிரம் தண்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றின் உரிமையாளருக்கு யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றால் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பகுதியில் உள்ள இரண்டு பல்பொருள் அங்காடிகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் திடீர் பரிசோதனைகள் முன்னெடுக்கப் பட்டன.

அதன் போது காட்சிப்படுத்தப்பட்ட காலாவதியான பொருட்கள் மற்றும் வண்டுகள் மொய்த்த பழுதடைந்த பொருட்கள் உள்ளிட்டன மீட்கப் பட்டுள்ளன.


மீட்கப்பட்ட பொருட்களை சான்றுப் பொருட்களாக நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய சுகாதார பரிசோதகர் அங்காடி உரிமையாளர் களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கு நேற்று நீதிமன்றில் அழைக்கப்பட்ட போது ஒருவர் நீதிமன்றில் முன்னிலையாகாத நிலையில் முன்னிலையான ஒரு அங்காடி உரிமையாளருக்கு எதிராக 18 குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தண்டப்பணமாக 180 000 ரூபா அறிவிடப்பட்டதுடன் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (நி-5-30)

## கரும்புள்ளியான் - மல்லாவி வரையான வீதி புனரமைப்பினை பூரணப்படுத்துங்கள்

(அக்கராயன்)



முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் கரும்புள்ளியான் தொடக்கம் துணுக்காயின் மல்லாவி வரையான வீதி புனரமைப்பு வேலைகள் முழுமையடையாமல் அரை குறையாக நிறுத்தப்பட்டுள் ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட வீதிப்புனரமைப்பு பணிகள் சுமார் எட்டு கிலோமீற்றர் வரையான வீதியில் நான்கு கிலோமீற்றர் வீதி வேலைகள் நிறைவுபெற்ற நிலையில் மிகுதி வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மாந்தை கிழக்கு துணுக்காய் பகுதி மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். (நி-5-350)

## கலியுக வரதன் கானங்கள் இசைப்பேழை வெளியீட்டு விழா

(சாவகச்சேரி)

கைதடி வடக்கு கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான புகழ்பாடும் "கலியுக வரதன் கானங்கள்" இசைப்பேழை வெளியீட்டு நிகழ்வு நாளை புதன் கிழமை இரவு 7மணிக்கு ஆலய வளாகத்தில் இடம் பெறவுள்ளது.

ஆலய தர்மகர்த்தா க.பிரதீபன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கம், சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் சி. செந்தில்வேல் ஆகியோர் கலந்து சிறப்பிக்க வுள்ளனர். (நி-30)

### பயிற்சிக்கூடம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் அருள்ஞான மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில் தமிழ் வழிபாட்டு பயிற்சிக்கூடம் நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு திறந்து வைக்கப் படவுள்ளது. (நி-5)

### திருக்குளிர்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தான திருக்குளிர்ச்சி அபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

## முதியவர்களுக்கான கொடுப்பனவை கிராமத்தில் வைத்து வழங்குங்கள்

### புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் கிராம முதியவர்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு சுதந்திரபுரம் கிராமத்தில் உள்ள முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை கிராமத்திற்கு வருகை தந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எடுக்க வேண்டும் என அப்பகுதி முதியவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் இருந்து சுதந்திரபுரம் கிராமம் நீண்ட தூரத்தில் உள்ளது.

தமது கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கு எட்டு கிலோ மீற்றர் தூரம் முதியவர்கள் நடந்து சென்றே ஏ-35 சாலையை அடைந்து அங்கிருந்து பேருந்தில் புதுக்குடியிருப்பிற்கு செல்ல வேண்டும்.

முன்பு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் சுதந்திரபுரம் கிராம அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. தற்போது அவ்வாறு வழங்கப்படுவதில்லை.

1,000 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற இக் கிராமத்தில் போக்குவரத்து நெருக்கடி பெரும் பிரச்சினையாக உள்ள நிலையில் பிரதேச செயலகம் தமது கொடுப்பனவுகளை முதியவர்களுக்கு சுதந்திரபுரம் கிராமத்தில் வைத்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என முதியவர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-5-350)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 434





இளவரசர் சேனாதிபதி பூதிவிக்கரமகேசரியைப் பார்த்து "ஐயா! பரம்பரையாக எங்கள் குடும்பத்துக்குச் சிநேகிதமான குலத்தின் தலைவர் தாங்கள். என் தந்தையின் உற்ற நண்பர். தங்களை நான் என் தந்தைக்கு இணையாகவே மதித்து வந்திருக்கிறேன்.

நீங்களும் என்னைத் தங்கள் சொந்தப் புதல்வனாகவே கருதிப்பாராட்டி வந்திருக்கிறீர்கள். ஆகையால் இச்சமயம் என்னுடைய கடமையைச் செய்வதற்குத் தாங்கள் உதவி செய்ய வேண்டும். அதற்குக் குறுக்கே நிற்கக் கூடாது! என்றார்.

சேனாதிபதி மறுமொழி சொல்வதற்குள் பார்த்திபேந்திரனையும் திரும்பிப்பார்த்து, ஐயா! தங்களையும் கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் என் அருமைத் தமையனாரின் உற்ற நண்பர். என் தமையனாரின் வாக்கைத் தெய்வத்தின் வாக்காக மதித்து நான் போற்றுகிறவன். ஆகையால் தங்களுடைய வார்த்தையையும் மதித்துப் போற்றக் கடமைப்பட்டவன். தங்களைப் பெரிதும் வேண்டிக் கொள்கிறேன். என் கடமையை நான் நிறைவேற்றுவதற்குத் தடை எதுவும் சொல்லக்கூடாது! என்றார்.

சேனாதிபதியும் பார்த்திபேந்திரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். அந்தப் பார்வையின் மூலம் ஒருவருடைய பயத்தை இன்னொருவருக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

சேனாதிபதி இளவரசரைப் பார்த்து, "இளவரசே! தாங்கள் கூறுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. வாழ்நாளெல்லாம் நான் போர்க்களத்திலே கழித்தவன். மூடு மந்திரமாகப் பேசினால் தெரிந்து கொள்ள இயலாதவன். தங்களுடைய கடமையைச் செய்யப் போவதாகச் சொல்கிறீர்கள். அப்படியென்றால் எந்தக் கடமையை, என்ன மாதிரி செய்யப் போவதாக உத்தேசித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

இச்சமயம் என்னுடைய கடமை ஒன்றே ஒன்றுதான். என் தந்தையின் கட்டளையை நிறைவேற்றி வைக்க வேண்டியதுதான். என்னைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படியான கட்டளையுடன் என் தந்தை ஆட்களை அனுப்பி வைத்திருக்கிறார்.

என்னை அவர் தேடி அலையும்படியாக ஏன் வைத்துக் கொள்ள வேண்டும் நானே அவர்கள் இருக்குமிடம் சென்று என்னை ஒப்புக் கொடுத்துவிடுவேன். அதுவே இப்போது நான் செய்ய வேண்டிய கடமை.

முடியவே முடியாத காரியம். என் உடம்பில் உயிருள்ள வரையில் அதை நான் அனுமதிக்க மாட்டேன் தடுத்தே தீருவேன் என்றான் பார்த்திபேந்திரன்.

சேனாதிபதி அவனைப் பார்த்து பதறவேண்டாம் பொறுங்கள்! என்றார். பின்னர் இளவரசரை நோக்கிக் கூறினார்.

ஐயா! தங்களுடைய கடமையைப் பற்றிச் சொன்னீர்கள். எனக்கும் ஒரு கடமை இருக்கிறது. அருள் புரிந்து அதைக் கேட்க வேண்டும்.

கொடும்பாளூர் வேளார் பெருங்குடியில் இன்று உயிரோடிருக்கும் ஆண் மகன் நான் ஒருவன் தான். மற்றவர்கள் அனைவரும் சோழ சாம்ராஜ்யத்தின் சேவையில் இறந்து போனார்கள். அநேகமாக எல்லாரும் போர்க்களத்தில் மடிந்தார்கள். நானும் ஒரு நாள் அவ்விதம் இறந்து போவேன். யார் கண்டது.


ஆகையால் என் வார்த்தையைக் கொஞ்சம் பொறுமையுடன் கேட்க வேண்டும். அரண்மனை மாடங்களில் அருமையாக வளர்க்கப்பட்டு வந்த தங்களைச் சென்ற ஆண்டில் தென் திசைப் படைகளின் மாதண்ட நாயகராகச் சக்கரவர்த்தி நியமித்தார்

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நேர்மை கொண்ட உள்ளம்



மரியாதை ராமன் தெனாலி ராமன் போல் விகடகவி அல்ல. அவர் மிகவும் புத்திசாலி. இளம் வயதிலேயே பெரியவர்களுக்கு புலப்படாத நுணுக்கமான விடயங்களையும் எளிதில் கண்டுபிடிப்பார்.

மரியாதை ராமனின் தீர்ப்புகள் அனைத்தும் புகழ்பெற்ற கதைகளாக மக்களிடம் பேசப்பட்டு வருகிறது அதில் ஒன்று தான் இந்தக்கதை.

மரியாதை ராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரன் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர் பணத்தாசை பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான சம்பளம் கொடுக்கமாட்டார்.

ஒரு முறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்று விட்டு கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டிற்கும் வரும் போது தனது பணப்பையைத் தொலைத்துவிட்டார்.

வீட்டிற்கு வந்ததும் வண்டியில் பணப்பையை தேடிப் பார்த்து கிடைக்காமல் புலம்பினார். மாட்டு வண்டி ஓட்டி வந்தவர் முதல் அனைவரையும் கேட்டு பார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார் அப்போது அவரது மனைவியார் உங்களின் பணப்பையை கண்டுபிடித்து கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்கள் நிச்சயமாக யாராவது கொண்டு வந்து கொடுப்பார்கள் என்றார்.

ஆகா இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லி விட்டார். ஊர் மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். அப்படி தேடி பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர் ஏழையாக இருந்தாலும் கௌரவமாக வாழ பிரியப்படுபவர். தன்னால்முடிந்தவரை அடுத்தவர்களுக்கு உதவுபவர்.

அவர் விவசாயம் செய்த நிலத்தில் நிலத்தடி நீர் கிடைக்காததால் விவசாயம் சரி யாக செய்யமுடிய வில்லை, வேறு தொழில் செய்யவோ தன்னிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்கத்து ஊருக்கு சென்று ஏதாவது வேலை செய்து சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்து வந்தார். போகிற வழியில் காட்டுப்பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்கு போய் வேண்டிக் கொண்டார்.

அப்படி காட்டுவழியில் போகும் போது அங்கே ஒரு புறா அடிப்பட்டு கீழே கிடந்தது. அதைப் பார்த்து இரக்கப்பட்ட பூபாலன் அந்த புறாவை தூக்கிக் கொண்டு அருகில் இருந்த குளத்திற்கு கொண்டு சென்று தண்ணீரை எடுத்து அந்த புறாவின் வாயில் ஊற்றினார். பின்னர் அந்த புறாவை அருகில் இருந்த மரக்கிளையில் வைத்து விட்டு வந்தார். அவர் அப்படி வரும் போது பாதையின் ஓரத்தில் காலில் ஏதோ மாட்டியதைக் கண்டார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோளை அடையும் முயற்சியில்தான் மகிமை இருக்கிறது. அந்தக் குறிக்கோளை அடைவதில் இல்லை.
– காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழக அரசியல் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துங்கள்

தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து எங்கள் கடற்பரப்புக்குள் இருக்கக்கூடிய மீன் வளங்களை அள்ளிச் செல்கின்ற சம்பவம் நீண்டு செல்கின்றது.

இதன் காரணமாக எங்கள் கடற்றொழிலாளர்கள் மிகுந்த நட்டத்தை அனுபவிப்பதுடன் உள ரீதியாகவும் கவலை கொண்டுள்ளனர்.

இதற்கு மேலாக, தமிழக மீனவர்களும் எங்கள் ஈழத் தமிழ் மீனவர்களும் முரண்பட்டுக் கொள்வதானது ஒட்டுமொத்தத் தமிழினத்துக்கும் பாதகத்தைத் தரவல்லது

இதேவேளை தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வருகின்றபோது, அவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்கின்ற சம்பவங்களும் அவர்களின் படகுகளும் கடற்றொழில் உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படுகின்ற நிலைமைகளும் ஏற்படுகின்றன.

இது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. உண்மையில் கடற்படையினரால் கைது செய்யப்படுகின்ற தமிழக மீனவச் சகோதரர்கள் எங்கள் மண்ணில் சிறையில் அடைக்கப்படுகின்ற சம்பவம் எமக்கு மிகுந்த வேதனையைத் தருகிறது.

ஆம், எமக்கு இன்னல்கள் ஏற்பட்டபோதெல்லாம் படகேறி தமிழகத்தில் தஞ்சம் புகுந்தோம். எங்கள் தமிழக உடன் பிறப்புக்கள் எங்களைக் காப்பாற்றுவார்கள் என்ற ஒரே நம்பிக்கையில்.

அந்த நம்பிக்கைக்கு ஏற்றாற்போல் தமிழக உடன்பிறப்புக்கள் எங்களை வரவேற்று அரவணைத்தனர்.

அவர்கள் செய்த உதவியை இந்த உலகம் உள்ளவரை நாம் மறக்க முடியாது.

உண்மை, எங்கள் தமிழ் மக்களின் குருதியை சிங்களப் பேரினவாதப் பேய்கள் உறிஞ்சிக் குடித்தபோது, வேதனை தாங்க முடியாமல்; தமிழகத்துச் சகோதரன் முத்துக்குமாரன் தீக்குளித்து தன்னுயிரை எங்களுக்காக ஆகுதியாக்கியதை நாம் எங்ஙனம் மறக்க முடியும்.

ஆக, எத்தகைய இடர்கள் வந்தாலும் தமிழகமும் ஈழத் தமிழினமும் இரத்தத்தின் இரத்தங்களாக, ஒருதாய் பெற்ற பிள்ளைகளாக, உடன்பிறப்புகளாக என்றென்றும் வாழ வேண்டும். அத்தகு உறவுக்கு எந்தப் பங்கமும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது எங்கள் அனைவரதும் கடமையாகும்.

எனவே தமிழகத்து மீனவச் சகோதரர்கள் தங்களின் கடல் எல்லையைத் தாண்டி எங்கள் கடல் எல்லைக்குள் வருவதை முழுமையாகத் தவிர்க்க வேண்டும்.

இதனைச் செய்வதன் மூலம் எத்தனையோ பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

இந்த சுமுகமான நிலைமையை ஏற்படுத்த எங்கள் தமிழ் அரசியல் தலைவர்களும் தமிழகத்து அரசியல் தலைவர்களும் ஏதோவொரு வழிமுறையில் கலந்துரையாடி, நிலைமையைச் சுமுகமாக்க வேண்டும்.

இதைச் செய்யாமல் தாமதிக்கின்ற ஒவ்வொரு கணப்பொழுதும் எங்கள் தமிழினத்துக்குப் பெரும் பாதகமாக அமையும் என்பது நிறுதிட்டமான உண்மை.

# நாட்டில் கடுமையான வெப்பம் முகக் கவசங்களை அணியுங்கள்

## சுகாதாரத் தரப்பு அறிவுறுத்தல்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் கடும் வெப்பமான காலநிலை காரணமாக சுவாசக்கோளாறினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் மேலும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக சுகாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இதன் காரணமாக தொற்று நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக கண்டி தேசிய வைத்தியசாலையின் சுவாச நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் துஷாந்த மத்கெதர தெரிவித்துள்ளார்.

கடும் வெப்பம் காரணமாக ஏற்பட்டுள்ள தூசியின் அதிகரிப்பினால் சுவாச பிரச்சினைகள் ஏற்படும். இதனால் காய்ச்சல், வைரஸ் தொற்றுகள் மூக்கிற்கு தொடர்புடைய பல பிரச்சினைகள் ஏற்படும் அபாயம் தீவிரமடைந்துள்ளது.

இதனால் சுவாச பிரச்சினை உள்ளவர்கள் மற்றும் இல்லாத அனைவரும் கட்டாயம் முகக் கவசம் அணிய வேண்டும்.

நோய்கள் பரவாமல் தடுக்க முகக் கவசம் பயன்படுத்துவது மிகவும் பொருத்தமானது என சுவாச நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் பேராசிரியர் துஷாந்த மத்கெதர தெரிவித்துள்ளார். (ம-7.10)

## போலி தேசப்பற்றாளர்களை மக்கள் அறிய வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

மக்களை தவறாக வழிநடத்தி தேசிய ஒற்றுமையை சீர்குலைத்து, நாட்டையும் சீர்குலைக்கும் போலி தேசபற்றாளர்களை மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல்தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

சிங்களம் மாத்திரம் தமிழ் மாத்திரம் என தெரிவித்து நாட்டை முன்நோக்கி கொண்டு செல்ல முடியாதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு கோஷம் எழுப்புபவர்கள் போலி தேசபற்றாளர்கள் எனவும், அவர்களின் குறுகிய சிந்தனைகளின் ஊடாக எம்மால் உலகை வெற்றி கொள்ள முடியாதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (ம-7.10)

## ஜனாதிபதித் தேர்தலை பிற்போட முடியாது

### மகிந்த தேசப்பிரிய

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை எந்தக் காரணத்திற்காகவும் பிற்போட முடியாது என தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டும்.

நாட்டில் தற்போது இடைக்கால ஜனாதிபதியின் ஆட்சியே தொடர்கின்றது.

இடைக்கால ஜனாதிபதி ஒருவருக்கு ஒரு வருடம் மாத்திரம் வழங்கப்பட்டால் போதுமானது. தற்போது இந்த கால எல்லை கடந்துள்ளது.

தற்போதைய பாராளுமன்றுக்கும் மக்கள் ஆணை இல்லை. எனவே புதிய ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

பாராளுமன்றம் உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியன புதுப்பிக்கப்பட வேண்டும். இந்த வருட இறுதிக்குள் இவற்றை பூர்த்தி செய்ய வேண்டும்.

அதேபோல் பாராளுமன்ற தேர்தலை அடுத்த வருடம் நடத்தமுடியும்” என தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப்பிரிய மேலும் குறிப்பிட்டார். (ம-7.10)

## யாழில் விடுதி முற்றுகை ஐவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இயங்கி வந்த விபச்சார விடுதியொன்று நேற்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டதோடு, 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவில் விபச்சார விடுதியாக செயற்பட்ட வீட்டில் தங்கியிருந்த 2 யுவதிகளும், 3 ஆண்களும் கைது செய்யப்பட்டனர்.

சுழிபுரம், சங்கானை, கிளிநொச்சி பகுதிகளிலிருந்து யுவதிகள் அங்கு வந்து விபச்சாரத்தில் ஈடுபட்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது .

நேற்று பொலிஸார் சுற்றிவளைத்து அங்கிருந்தவர்களை கைது செய்துள்ளனர்.

அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7.10)

### மீனவர் விவகாரம்

## மோடியின் கருத்துக்கு ஸ்டாலின் கடும் கண்டனம்

(சென்னை)

கச்சத்தீவு விவகாரம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில் இந்திய பிரதமர் மோடி தெரிவித்த கருத்துக்கு ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. அரசு செய்த பாவத்தால்தான் தமிழக மீனவர்கள் இலங்கை அரசினால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாக இந்தியப் பிரதமர் மோடி அண்மையில் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், மோடியின் இக் கருத்துக்கு கண்டனம் வெளியிட்டுள்ள தமிழக முதலமைச்சர் ஸ்டாலின்,

‘தி.மு.க. அரசின் கடும் எதிர்ப்பையும் மீறித்தான் கச்சத்தீவு இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது என்ற உண்மை வரலாற்றை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

அத்துடன் கச்சத்தீவை மீட்க கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க அரசு எடுத்த நடவடிக்கை என்ன? தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை அரசால் தொடர்ந்து சிறைப் பிடிக்கப்படுவதையும் சித்திரவதைக்கு ஆளாவதையும் தடுத்து நிறுத்தாதது ஏன்? அவர்கள் இந்தியர்கள் இல்லையா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் அதானி நிறுவனத்தின் வர்த்தக நலன்களுக்காக இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்த பா.ஜ.க அரசு இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமைக்காக வாய் திறக்காதது ஏன்?

படகுகளைப் பறிமுதல் செய்து நாட்டுடைமை ஆக்கிவிட்டதாக அறிவிக்கிறது இலங்கை அரசு. இந்திய அரசு இதை அதிகாரபூர்வமாக, வெளிப்படையாகக் கண்டிக்காதது ஏன்? என தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் கேள்வி எழுப்பினார். (ம-7.10)

## காலியில் ஆற்றில் மூழ்கி இரு சிறுவர்கள் உயிரிழப்பு

(காலி)

காலி - யக்கலமுல்ல பகுதியில் பொல்அத்து மோதர ஆற்றில் மூழ்கி இரண்டு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

11 மற்றும் 14 வயதுடைய இரண்டு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள் தமது பெற்றோருடன் ஆற்றில் நீராடச் சென்றபோது இந்த அனர்த்தத்திற்கு முகங்கொடுத்துள்ளனர்.

உயிரிழந்த சிறுவர்களின் சடலம் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தாய்மொழிகள் தினம் பெப்ரவரி 21 ஆம் திகதி

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

25



கோலாலம்பூரில் உள்ள மலாயாப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலேசிய உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மலாயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வியல் துறை ஆகியவை கூட்டாக ஒழுங்கு செய்திருந்தன. இம்மாநாட்டுக்கான கருப்பொருள் "உலகமயக்காலகட்டத்தில் தமிழாய்வுக் குவளம் சேர்த்தல்" என்பதாகும்.

### பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

பத்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2019 யூலை 3 முதல் 7 வரை ஐக்கிய அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடைபெற்றது. உலகத் தமிழாராய்ச்சி மன்றம் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை, சிகாகோ தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து இம் மாநாட்டை நடத்தியது.

### பதினோராவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

பதினோராவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2023 யூன் 16 முதல் 18 வரை சிங்கப்பூரில் நடத்துவதற்காகத் திட்டமிடப்பட்டது. ஆனால் அம்மாநாடு அங்கு நடத்தப்படவில்லை. அதற்கு மாறாக இரண்டு போட்டி மாநாடுகள் அதே ஆண்டில் யூலை 7 முதல் 9 வரை இந்தியாவின் சென்னையிலும், யூலை 21 முதல் 23 வரை மலேசியாவின் கோலாலம்பூரிலும் நடைபெற்றன.

உலக தமிழ் ஆராய்ச்சி மன்ற தலைவர் பொன்னவைக்கோ தலைமையில் ஒரு குழு சென்னையிலும், முன்னாள் தலைவர் மாரிமுத்து தலைமையில் ஒரு குழு மலேஷியாவிலும், 11ஆவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தி முடித்திருக்கின்றன.

### உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் சென்னையில் நடந்த பதினோராவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழகத்தில் நடைபெற்ற பதினோராம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக அம்மன்றத்தின் பொதுக் குழுக் கூட்டம் சென்னை செம் மஞ்சேரியில் உள்ள ஆசியவியல் நிறுவனத்தில் 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 8 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவர் முனைவர் மு.பொன்னவைக்கோ வரவேற்புரை ஆற்றியதை அடுத்து அமெரிக்காவின் சிக்காகோவில் நடைபெற்ற 10 ஆவது உலகத்தமிழ் மாநாட்டிற்கும் 11ஆவது உலகத் தமிழ் மாநாட்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற செயற்பாடுகளைத் தொகுத்து வழங்கினார்.

சென்னையில் உள்ள இலயோலா கல்லூரியிலும் நாமக்கல்லில் உள்ள கல்லூரியிலும் தேசிய அளவிலான கருத்தரங்குகள் நடைபெற்றதைத் தொடர்ந்து இந்தப் பதினோராம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்றது.

திரு அரசர் அருளாளர் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதையடுத்து மூன்று துணைத் தலைவர்களாக முனைவர் ஜான் சாமுவேல் (இந்தியா), முனைவர் / பிரான்சிஸ் எஸ். முத்து (அமெரிக்கா), திருஎஸ். மணியம் (சிங்கப்பூர்) ஆகியோரையும் மூன்று பொதுச் செயலாளர்களாக முனைவர் ப.மருத நாயகம் (இந்தியா), முனைவர் சண்முகதாஸ் (இலங்கை), ரவி பாலா (அமெரிக்கா) ஆகியோரையும் இரண்டு பொருளாளர்களில் ஒருவராக நாகமாணிக்கம் கணேசன் (அமெரிக்கா) மற்றும் இரண்டு ஒருங்கிணைப்பாளர்களாக முனைவர் வெ.முருகன் (இந்தியா), முனைவர் முகிலை இராசபாண்டியன் (இந்தியா) ஆகியோரையும் பிற பொறுப்பாளர்களாகப் புதிய தலைவர் அரசர் அருளாளர் தேர்ந்தெடுத்தார்.

200இற்கும் அதிகமானோர் மாநாட்டில் பங்கேற்றனர். சிங்கப்பூரைச் சேர்ந்த எஸ்.மணியம் ஏற்பாட்டுக் குழுவில் செயலாற்றினார். அவருடன் சிங்கப்பூர் தரப்பிலிருந்து முன்னாள் தமிழ் ஆசிரியரான முனைவர் ஸ்ரீலட்சுமி கட்டுரை மறு ஆய்வுக் குழுவில் இடம்பெற்றார்.

மாநாட்டில் படைக்கப்பட்ட 1,075 கட்டுரைகளில் 200 ஆய்வுக்கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டன. என்று எஸ்.மணியம் கூறினார்.

மலேசியாவிலிருந்து சென்ற 10 பேராளர்களில் மூவர் மொழியியல் பற்றிய கட்டுரைகளை வாசித்தனர், எஞ்சியோர் பார்வையாளர்கள்.

11 ஆம் உலகத் தமிழ் மாநாடு நிறைவடைந்ததும் புதிய பொறுப்பாளர்கள் செயற்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. அடுத்த மாநாடு பிரான்ஸ், சிங்கப்பூர் அல்லது இலங்கையில் நடைபெறக்கூடும் என்றார் திரு மணியம். மேல் விவரங்களுக்கு www.iatrofficial.org என்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இணையத்தளத்தை நாடலாம் என்றார்.

இந் நிலையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் என்ற அமைப்பின் ஏற்பாட்டில் மலேசிய தலைநகர் கோலாலம் பூரில் அமைந்துள்ள மலாயா பல்கலைக் கழகத்தில் 11ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 2023 ஆம் ஆண்டு யூலை 21, 22, 23 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

### உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கோலாலம்பூரில் நடந்த பதினோராவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை முதன் முதலில் பழம்பெரும் தமிழ் அறிஞர் தனிநாயகம் அடிகளார் கோலாலம்பூரில் 1966ஆம் ஆண்டு தொடக்கி வைத்தார். 11 ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடான இந்த மாநாடு நான்காவது முறையாக மலேசியாவின் தலைநகரான கோலாலம் பூரில் மலாயா பல்கலைக்கழகத்தில் ஜூலை 21, 22, 23 திகதிகளில் நடைபெற்றது.

ஐக்கிய அரபுச் சிற்றரசின் ஷார்ஜா நகரில் இடம்பெறுவதாக இருந்த மாநாடு, கொவிட்-19இற்குப் பின்பு நிலவிய நிதிப்பற்றாக்குறை காரணமாக மலேசியாவுக்கு மாற்றப்பட்டதாக உலகத் தமிழ் ஆரய்ச்சி நிறுவனத்தின் தலைவர் த.மாரிமுத்து தங்கவேலு தெரிவித்தார்.

இந்த 11ஆம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கோலாலம்பூரின் ஏறக்குறைய ஆயிரம் பேராளர்களுடன் சேர்த்து மொத்தம் 3,000 பேர் கலந்துகொண்டனர். பன்முகத் தன்மைமிக்க, முற்றிலும் முரணான கொள்கை கொண்ட தமிழ்த் துறையினர் பலர் ஒன்றுதிரண்டு தமிழ் மொழி தொடர்பில் கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டது ஓர் அசாதாரண முயற்சியே.

பேராளர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் மலேசியாவைச் சேர்ந்தவர்கள், ஏறத்தாழ 400 பேர் இந்தியாவைச் சேர்ந்தோர். சிங்கப்பூரைப் பிரதிநிதித்துவப்படுத்தி 75 பேராளர்கள் மாநாட்டில் கலந்துகொண்டனர். இதரபேராளர்கள் ஜப்பான், சீனா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

மாநாட்டுத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட 2,000இற்கும் மேற்பட்ட கட்டுரைகளில் 501 கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டன. 'இணையக் காலகட்டத்தில் தமிழ் மொழி' என்ற கருப்பொருளைக் கொண்டிருந்த இம்மாநாட்டின் கட்டுரைத் தலைப்புகள் பலதரப்பட்டவை. கட்டுரைப் பகிர்வுகளுடன் முக்கியப் பிரமுகர்கள் பலர் 15 நிமிடச் சிற்றுரைகளையும் ஆற்றினர்.

'சிங்கப்பூரும் தமிழும்' என்ற தலைப்பில் சிங்கப்பூரின் முன்னாள் நியமன பாராளுமன்ற உறுப்பினர் இரா. தினகரன் உரையாற்றினார். 1969ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரில் அதிகாரத்துவ மொழிகளில் ஒன்றாக விளங்கிவரும் தமிழ், சிங்கப்பூரின் ஊடகங்களிலும் பள்ளிகளிலும் பொதுப் போக்குவரத்திலும் பரவியிருப்பதைச் சுட்டினார்.

சிங்கப்பூர்-மலாயாவில் தமிழ்த் துறையை நிறுவ வகைசெய்த தமிழவேள் கோ. சாரங்கபாணி தாம் நிறுவிய தமிழ் முரசு செய்தித்தாள் மூலமாக இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதாக திராவிடக் கழக இயக்கத்தின் தலைவர் கி.வீரமணி மாநாட்டில் சிறப்பித்துக் குறிப்பிட்டிருந்தார்.

மாநாட்டுக் கருப்பொருளுடன் ஒட்டாத விவகாரங்கள் குறித்தும் சிலர் பேசினர். உதாரணமாக, தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன், உலகின் பிற சமயங்கள் சகோதரத்துவத்தை வளர்ப்பதாகக் கூறி, இந்து மதத்தின் தத்துவமான சனாதனம் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் மறுக்கிறது என்று கூறியது பார்வையாளர்கள் பலரைக் கோபப்படுத்தியதைக் காண முடிந்தது. மேடையிலிருந்து அவர் இறங்கும்படி சிலர் கூச்சலிட்டனர்.

அமைதிகாக்குமாறு பார்வையாளரிடம் கேட்டுக்கொண்ட துணை அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி, இந்துவாக வளர்ந்த தம் வீட்டில் வேற்றுமை கற்றுத்தரப்படவில்லை என்றும் மக்களைப்பிளவுப்படுத்த நினைக்கும் அரசியல் சித்தாந்தத்திலிருந்து முதலில் சாதியம் அகற்றப்படவேண்டும் என்றும் கூறினார். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றில்...

வசித்து வரும் இளம் யுவதி ஒருவர் நேற்று மாலை கிணற்று மோட்டரை போட்டபோது அதன் குழாய் கழன்ற மையால் அதனை பூட்ட முயற்சித்த போது கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளார்.

தொடர்ந்து மோட்டர் இயங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த அயல் வீட்டார் கிணற்றடிக்கு சென்று பார்த்தபோது குறித்த இளம் யுவதி கிணற்றில் விழுந்து இருந்ததை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் யுவதியை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் மரணமடைந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,250)

## பேருந்து...

சிவக்கொழுந்து வள்ளியப்பிள்ளை (வயது-76) என்பவரே உயிரிழந்தவராவார்.

வவுனியாவிலிருந்து தலைமன்னார் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து குறித்த பேருந்து தரிப்பிடத்தில் தரித்து நின்ற சமயத்தில் பேருந்தில் ஏறுவதற்காக வீதியின் குறுக்காக பேருந்தின் முன்பக்கமாக வந்த முதியவரொருவர் பேருந்தில் ஏற முற்பட்ட சமயத்தில் பேருந்தினை சாரதி செலுத்தியமையினால் பேருந்தில் சிக்குண்டு முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தமையுடன், பேருந்தின் சாரதியையும் கைது செய்தனர். (ம-7,10,250)

## யானை தாக்கி...

பகுதியைச் சேர்ந்த தனபாலகே அனுர தென்னக்கோன் (வயது-63) என்பவரே உயிரிழந்தவராவார்.

செட்டிகுளம், மருதமடுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வீதியால் பயணித்த குறித்த நபரை அப்பகுதிக்கு வந்த யானை தாக்கியுள்ளது.

இதனால் படுகாயமடைந்த குறித்த முதியவர் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்ட போதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,250)

## ஜனாதிபதித்...

துள்ளார்.

எனவே முதலில் ஜனாதிபதித் தேர்தலுக்கு தயாராகுமாறு அமைச்சரவைக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

முதலில் பொதுத் தேர்தல் நடத்தப்படுமா? அல்லது ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படுமா? என்பது குறித்த ஊகங்கள் பரவலாக எழுந்துள்ள நிலையில், அமைச்சரவையில் இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, நாட்டின் அரசியலமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும், எனவே அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றார்.(ம-7,10)

## 100 மில்லியன்...

கடனுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரின் நலனுக்காக குறித்த தொகை பயன்படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கடனில் ஏற்றுமதி, சுற்றுலா, தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளில் குறைவான, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு 50 மில்லியன் டொலர் கடன் வழங்கப்படவுள்ளது. (ம-7,10)

## தமிழ்க் கட்சி...

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று 8 பேர் கைது செய்யப்பட்டமை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்திப்பதற்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தீர்மானித்திருந்தனர்.

இதற்கமைய, நேற்றுஅது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குமாறு கோரியிருந்த நிலையில், ஜனாதிபதி செயலகத்தால் அதற்கான நேரம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்தநிலையில், நாளை முற்பகல் 11.30க்கு குறித்த கலந்துரையாடலை நடத்துவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ம-7,10)

## சபாநாயகர்...

முதல் பி.ப 4.30 மணி வரையிலும் விவாதம் நடைபெறவுள்ளது.

இரண்டாவது நாளான நாளை புதன்கிழமை பி.ப 4.30 மணிக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான வாக்கெடுப்பை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதாக பதில் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். (ம-7,10)

## மனித உரிமை...

தொடர்பில் வவுனியா பிராந்திய அலுவலக ஒருங்கிணைப்பாளரின் அறிக்கை நாளை கிடைக்கப் பெறும் எனவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த 8ஆம் திகதி சிவராத்திரி தினத்தன்று பூஜை வழிபாடுகளில் ஈடுபடச் சென்ற பக்தர்களுக்கு பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டதுடன், இரவு வேளையில் அங்கு வழிபாடுகளைத் தொடர முற்பட்டோர் அங்கிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

அதுமாத்திரமன்றி ஆலயப் பூசகர் உள்ளடங்கலாக எண்மர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஐவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், அவர்களை விடுவிப்பதற்குரிய சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுமென அளிக்கப்பட்ட உத்தரவாதத்தை அடுத்து அப்போராட்டம் கைவிடப்பட்டது.

இது பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின ஆணையாளர்களில் ஒருவரான பேராசிரியர் ரி.தனராஜ் தெரிவிக்கையில்,

கடந்த திங்கட் கிழமை நடைபெற்ற ஆணைக்குழுவின் கூட்டத்தில் இவ்விவகாரம் குறித்து கலந்துரையாடினோம்.

ஆணைக்குழுவின் தவிசாளர் இது குறித்த விசாரணைகளுக்காக 2 அதிகாரிகளை ஏற்கெனவே வவுனியாவுக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும், அவ்வதிகாரிகளின் அறிக்கை வெகுவிரைவில் தமக்குக் கிடைக்கப்பெறும் எனவும் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய அலுவலகத்தின் ஒருங்கிணைப்பாளர் ரோஹித பிரியதர்ஷனவுடன் தனிப்பட்ட முறையில் தொடர்புகொண்டு பேசியதாகவும், இவ்விவகாரம் தொடர்பான அறிக்கையை அவர் (ரோஹித பிரியதர்ஷன) நாளை மறுதினம் கையளிப்பதாகக் கூறியிருப்பதாகவும் தெரிவித்தார். (ம-7,10)


தன நிதானய
திகதி - 2024.03.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1453
C 20 24 71 76 C
Double Chance 29901

மஹஜன சம்பத
திகதி 2024/03/18
சீட்டிழுப்பு இலக்கம் 5423
W 3 3 6 8 3 5
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/03/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1771
P 21 06 20 51 69
Double Chance 89422

லக்கி 7 VIP
திகதி 2024.03.18
சீட்டிழுப்பு இலக்கம் 0249
V 9 2 2 2 5 9 V
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3665
சீட்டிழுப்பு திகதி 18.03.2024
K 13 26 62 73
K 90162
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.03.18
சீட்டிழுப்பு இலக்கம் 0732
விருச்சிகம் 16 24 28 48 விருச்சிகம்
59539 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.03.2024 வெற்றி வாரம் 131 வர்ணம் ஊதா
Q 0 0 6 6 3 1
N
31,412,640.00
DLB 011-2 333 546-47 Web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2397 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 18.03.2024 தினம் திங்கள்
04 24 45 61 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,939,851.20
DLB

சனிதா Shanida
திகதி 2024.03.18 வெற்றி வாரம் 4558 வர்ணம் இளம் நீலம்
01 04 10 63 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,405,211.60
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4109 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்புத் திகதி 2024.03.18 தினம் திங்கட்கிழமை
05 29 38 58 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.12,368,737.60
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 28 10 14 27 72
1573 பச்சை 18.03.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 512,622,537.40
DLB 011-2 333 546-47

ஜயோதா Jayoda
திகதி 2024.03.18 வெற்றி வாரம் 2009 வர்ணம் செம்மஞ்சள்
48 54 60 65 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,535,841.20
DLB

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2223
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.99,917,688/-
சீட்டிழுப்பு திகதி : 2024.03.18
05 10 17 68 V
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (0138)

076 825 7716 (ஆகாஸ்)



**விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி வசதிகள்**

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show money) வசதிகள்

தொடர்புகளுக்கு : (0137)

074 17 37 684


# கைதானவர்கள்...

சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழுவினால் இந்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது அமர்வில் கலந்துகொண்டு இந்த அறிக்கையை கையளித்ததாக குழுவின் பணிப்பாளர் சபையின் தலைவர் சுதேஷ் நந்திமால் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிகவும் கவலையடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சித்திரவதை குற்றச்சாட்டில் உயர் நீதிமன் றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமித்தமை தொடர்பிலும் பேரவையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டது இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்ட முக்கிய தருணமாக பார்க்கப்படுவதாக சுதேஷ் நந்திமால் சுட்டிக்காட்டியுள்ளார். இதன்படி, சிறைக்கைதிகளின் உரிமை களை பாதுகாக்கும் குழு மற்றும் கூட்டுமையம் இணைந்து ஐக்கிய நாடுகள் சபையிடம் இந்த ஆவணம் கையளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)


**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு இரவு நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

வயது : 30 - 65

(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)

தொடர்புகளுக்கு

076 097 3121



**பதவி வெற்றிடம்**

- கணனி தமிழ் ரைப்பிங்
- கணனி பக்க வடிவமைப்பு

அனுபவமுள்ளவர்கள் மற்றும் பயிலுனர்கள் இருபாலாரும்

தொடர்புகளுக்கு :

076 097 3121

வலம்புரி
இல.191,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். பொது முகாமையாளர்


# பௌத்த மய...

பாண பல்கலைக்கழக மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நடாத்துவதற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

தொல்லியற் போர்வையிலான பண்பாட்டு அழிப்பையும் சிங்கள - பௌத்தமயமாக்கத்தையும் உடன்நிறுத்துமாறும், வெடுக்குநாறிமலையில் திட்டமிட்டு கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்யவும் வலியுறுத்தி இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இன்று நண் பகல் 12 மணிக்கு யாழ்ப்பாண பல்க லைக்கழக முன்ற லில் இந்த போராட் டத்தினை நடாத்து வதற்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. (ம-7,10)


**சாரதி தேவை**

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-





வயது: 21 முதல் 40 வரை
தொடர்புக்கு:-
0777068777
(C-8561)



**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-8561)



**அலுவலக வேலைக்கு பெண் வேலையாள் தேவை**

கணணி அறிவும் ஓரளவு ஆங்கில அறிவும் அவசியம் அலுவலக தரவுகளை நிர்வகிக்கக் கூடிய திறன் வேண்டும். வீட்டிலிருந்து பணிபுரியலாம். அலுவலகப் பாவனைக்குரிய கணணி வழங்கப்படும். நீண்டகால நிரந்தர வேலை ஆர்வம், அக்கறை உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும். (0139)

074 216 0494


# மரண அறிவித்தல்

## லோகேஸ்வரி செல்லத்தம்பி


யாழ் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் நாவலடி ஒழுங்கை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட லோகேஸ்வரி செல்லத்தம்பி அவர்கள் 17.03.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை - அன்னம்மா தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்ற கந்தப்பிள்ளை - காமாட்சி தம்பதிகளின் அன்புமருமகளும், காலஞ்சென்ற செல்லத்தம்பியின் அன்பு மனைவியும் தனலட்சுமி (ஓய்வுநிலை தேசிய கல்விநிறுவக யாழ் பிராந்திய இணைப்பாளர்), ஜெயலட்சுமி (கனடா), காலஞ்சென்ற சிவநேசன், மற்றும் நவலட்சுமி (ஓய்வுநிலை அதிபர்), சுவர்ணலதா(அவுஸ்திரேலியா), யோகராணி (அவுஸ்திரேலியா), செல்விகா (விடுதிப்பொறுப்பு தாதிய சகோதரி, யாழ் போதனா வைத்தியசாலை), செல்வரூபன் (பணிப்பாளர், ஹம்டன் இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட்) ஆகியோரின் அன்புத்தாயாரும் வில்வநாதன் (ஓய்வுநிலை அதிபர் தாதிய பயிற்சி கல்லூரி) , ரகுமத்(கனடா), சந்திரகுமார் (ஓய்வுநிலை அதிபர்), அருட்செல்வன்(அவுஸ்திரேலியா), கலாநிதி பரமேஸ்வரன் (அவுஸ்திரேலியா ), ஞானமதி(அவுஸ்திரேலியா ) ஆகியோரின் அன்பு மாமியாரும் எழினா(ஆசிரியை,புனித பத்திரிசியார் கல்லூரி)-சுதாகர்(சிரேஷ்ட விரிவுரையாளர், கணனி விஞ்ஞான பீடம், யாழ் பல்கலைக்கழகம்), Dr.விபுலன்-Dr.மகிழினி, Dr.கவினா-கேதீஸ், காமிலா-சுனில், ரசிக்கா-மயூரன், நதிக்கா, சுஜன்-நீதினி, சுஜானி(இலங்கை வங்கி, யாழ் 2ம் கிளை) -நிருஷன்(உதவிக் கல்விப் பணிப்பாளர், வடமாகாண கல்வித் திணைக்களம்), கஜன், ஷகிலன்-வைகரி, சுபன், வானதி, Dr.கஜனன், Dr.பாலகி, கவினன், யாதவன், சுரபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திரோஷன், கோபினா, பபிஷன், நிதிஷன், ஆதித்யன், ஆதவி, மீரா ஆகியோரின் அன்புப்பூட்டியும் காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் சிவஜாவின் அன்புப் பெரியம்மாவும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசரட்ணம், கோபாலபிள்ளை, தியாகராசா மற்றும் புஸ்பராணி, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, கமலாதேவி, கனகசுந்தரம், தங்கம்மா நாகேசு மற்றும் லீலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.03.2024 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணி தொடக்கம் 11.00 வரை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நாவலடி ஒழுங்கை,**
**மானிப்பாய்.** (0123)

*தகவல்:-*
**குடும்பத்தினர்**



மலர்வு 19.05.1930
உதிர்வு 17.03.2024

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org